# முகடு

Mukadu

"தமிழ் எங்கள் உயிருக்கு மேல்"

இருமாத இலக்கிய இதழ்.　　தை - மாசி 2016　　ஓலை – 9





# என் தனிமை

மூலம் – துருக்கி

யாருமே அறிந்திராத
எனக்குள்ளான ஒரு வெறுமை.
ஏதோ ஒன்று என்னுள் அசைகின்றது!

ஒரு முகவரியை இழக்க வேண்டுமென்றிருந்தால்!
இதயத்தின் துடிப்புக்களிலிருந்து
விலகியிருப்பதாகவிருந்தால்!
எந்தக் காலநிலையும் தன் மூச்சை
உணரமுடியாதிருந்தால்!

எவரும் இவற்றைப் பற்றி நினைப்பதில்லை.
நாம் காலங்களை அனுபவிக்கின்றோம்
அவற்றில்,
பல சிநேகமற்ற விடயங்களைச் சந்திக்கின்றோம்
எம் கேள்விகளை யாரும் கவனத்திற் கொள்வதில்லை

இந்த நாள் தன்னை ஆபிரிக்கா போல இருக்க
முடிவெடுக்கிறது,
இந்த உலகப்பரப்பில் இல்லாமலிருந்துகொண்டு!
அதுவும் போதாததென்று,

மஞ்சள்நிற சுருக்குகள் வைத்த ஆடையணிந்து
அவள் வந்தாள்
என் வாழ்விலுள்ள குறைபாடுகளை எனக்கு
இனங்காட்டினாள்.

நானோ என்னுள் சுருங்கி,
எந்தவொரு கதாபாத்திரத்தையும்
பிரதிபலிக்கமுடியாமல்!

பலவீனமாகின்றது என்னுடல்!
உங்கள் குரல்களில்
என் தனிமையானது பரவி அதிகரித்துச் செல்லட்டும்!

நான் இப்பொழுதெல்லாம் பறவைகளின்
பாடல்களை மட்டுமே கேட்கின்றேன்!

சுகிர்தா



கோமகனின்

# நேர்காணல்



**“சமூகம் எனக்கு என்ன தந்தது என்பதை விட நான் என்ன சமூகத்திற்கு கொடுத்தேன் என்பதை சிந்திக்கவே நான் விரும்புகின்றேன்**

**புலோலியூரான்**

ஈழத்தின் வடமாராட்சி பகுதியான தம்பசிட்டியில் பிறந்து ஜெர்மனி டுசில்டோர்ஃப், (Düsseldorf) நகரில் வாழ்ந்து வரும் டேவிட் யோகேசன் புலம் பெயர் இலக்கியப்பரப்பில் ”புலோலியூரான்” என்ற புனை பெயரில் அறிமுகமானவர். இவருடைய ஆக்கங்கள் இதுவரை இலக்கியப் பரப்பில் ஆவணப்படுத்தாவிட்டாலும், ஒர் சிறந்த அறிவியல் சிந்தனையாளராகவும் , கணனியியல், பொருளாதாரம், திட்டமிடல், நிதி துறை சார் வல்லுனராகவும் அரசியல் செயற்பாட்டாளராகவும் ,பயிற்சி விமான ஒட்டியாகவும் , ஜேர்மன் அரசினது ஆரம்பகால கணணி மென்பொருள்துறை ஆலோசகராகவும் ஆசிய, வளைகுடா மற்றும் ஆபிரிக்க தேசங்களில் பொருளாதாரம், திட்டமிடல், நிதி ஆலோசகராக என்று பன்முகப்படுத்தப்பட்ட இளைய தலைமுறையை சேர்ந்த புலோலியூரானை வாசகர்களுக்காக பல கட்ட மின்னஞ்சல் பரிவர்த்தனைகள் மூலம் நான் கண்ட நேர்காணல் இது

**கோமகன்**

**"மொத்தம் 225 நிறுவனத்தை ஒரு குடையின் கீழ் கொண்டுவந்து 2005 ல் இருந்து இன்றுவரையில் 493 திட்டங்களை ஜேர்மன் துதரகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினூடக இலங்கையில் நடைமுறைப்படுத்தியிருக்கிறேன்."**

**உங்களை நான் எவ்வாறு தெரிந்து கொள்ள முடியும்? மன்னிக்கவும், நீங்கள் யார் என சொல்லுங்கள்?**

இலங்கையில் இருந்து ஜேர்மன் வரை நான் அடிக்கடி எதிர்கொண்ட கேள்விகளில் ஒன்று இது. என் வாழ்க்கையில் நான் எதிர்கொண்ட எனக்கான அடையாளத்தை ஏற்படுத்திக்கொள்ள சந்திக்கும் மிகப்பெரிய சவாலாக இந்தக் கேள்வி எப்போதும் இருக்கிறது. உலகிற்கு என்னைத் தெரியாது. எனவே அடையாளத்தை நிலை நிறுத்துவது முழுவதும் என் பொறுப்பு.

இயற்கை எழில் சூழ்ந்த இயந்திர வாழ்வை தள்ளி வைத்து சுத்தமான சுதந்திரக் காற்றும், இயற்கையை மருந்துகளாகக் கொண்ட செழிப்பான ஊர் எம் ஊர். இன்பமானாலும் துன்பமானாலும் இங்கு சொந்தங்கள் சொர்க்கமாக இருப்பர். அழகிய இயற்கை வனப்புமிகுந்த எம் கிராமம் இலங்கையின் வடபகுதியில் உள்ள வடமாராட்சி பகுதியான தம்பசிட்டி எனும் சிறு கிராமம், எனது பிறப்பிடம்.

எனது தந்தை வைத்தியத்துறையில் கடமை நிமித்தம் வெவ்வேறு இடங்களில் வேலை காரணமாக இருந்ததனால் நானும் இலங்கையின் பல்வேறு நகரங்களில் பல்கலாச்சாரத்தில் வாழவேண்டிய சூழல். இந்த வாழ்ந்த அனுபவம் மறக்க முடியாதவை.

நான் கல்வி கற்றது ஹாட்லிக்கல்லூரியில். உயர்கல்வியை விவசாய விஞ்ஞானம் கிழக்கு பல்கலைக்கழகத்திலும், 83 கலவரத்தின் பின் ஜேர்மனிக்கு புலம்பெயர்ந்துபொருளாதார தொழில்நுட்ப விஞ்ஞானத்தில்(GöttingenGermany ஜோராஜ் அகௌஸ்ட்) பல்கலைக்கழகத்தில் எனது பல்கலைக்கழக படிப்பை தொடர்ந்திருந்தேன்.

1985ல் எனது பல்கலைக்கழக நண்பர்கள் அன்றய ஜேர்மன் அதிபர் கெல்மூட் கோல் (German Chancellor Helmut Kohl) மகன் பீற்றர் கோல் (Peter Kohl) & uy;t; F&`u; (Ralf Kruger) உடன் சேர்ந்து தகவல் தொழில்நுட்ப ஆலோசனை, தயாரிப்பு (Consulting & Development) நிறுவனத்தை ஆரம்பித்தேன். ஜேர்மனியில் ஒரு வெளிநாட்டவர் ஆரம்பித்த முதல் தகவல் தொழில்நுட்ப நிறுவனர் என்ற பெயர் என்னையே சாரும். இதற்கு திறவுகோலாக அமைந்தவர் அன்றய ஜேர்மன் அதிபர் கெல்மூட் கோல்,அத்துடன்உறுதுணையாக இருந்தவர்கள்(Infosys) நாராயணமூர்த்தியும் மைக்கிரோசொவ்ட்(Microsoft) நிறுவனத்தினரும். மொத்தம் 14 வருடங்கள் ஜேர்மன் அரசினது பல்வேறு தளங்களுக்கு, தொழில்நுட்பம் திட்டமிடல் ஆலோசகராக எனது நிறுவனம் இருந்ததில் மகிழ்ச்சியடைகிறேன்.

a) 1983 - 1988 காலப்பகுதியில் அகதியாக வருபவர்க்கு மிகவும் மோசமான சட்ட நடைமுறைகள் இருந்தன. நான் இங்குள்ள அதிஉயர்நீதிமன்றத்தினூடாக நடைமுறையில் இருந்த சட்டத்தை மாற்றியமைத்து அகதியாக வருபவர் இங்கு உயர்கல்வி கற்றலுக்கு அனுமதியழித்தமை.

b) ஜேர்மன் பாடசாலைகளில் எமது தமிழ் பள்ளிகளில் தமிழ்மொழிக்கான பெறுபேறுகள் சேர்த்துக்கொள்ளப்பட்டமை.

c) ஜேர்மன் அரசினது முதல் தொழில்நுட்பம் திட்டமிடல் ஆலோசகர் (அதற்கு முன் இப்படியான பதவி இருக்கவில்லை, அத்துடன் ஆசிய நாட்டவர் இப்படியான பதவியில் அமர்வதும் முதற்தடவை)

d) 1992ம் ஆண்டு Microsoft நிறுவனம் அறிமுகப்படுத்திய Microsoft Solution Provider பரீட்சையின் அதிகூடிய புள்ளிகள் பெற்று ஜேர்மனியின் முதல் Microsoft Partner ஆக தெரிவுசெய்யப்பட்டேன்.

e) எனது நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்ட தொழில்நுட்பம், மற்றும் மென்பொருட்கள் (மக்கள் தொகை நிர்வாகம், வெளிநாட்டவர் நிர்வகிப்பு, வாகன அனுமதிப்பத்திரம், பொலீஸ் மற்றும் இராணுவ ஆயுத நிர்வாகம், அமைச்சு அதற்கு கீழான அலுவலக நிர்வாகம்) இன்றுவரை பயன்படுத்தப்பட்டு வருகிறது.

f) 2000 ம் ஆண்டு Payback Syste அதை முதன்முதல் ஜேர்மனியில் அறிமுகப்படுத்தியது. (வாடிக்கையாளர்கள் பொருட்கள் கொள்முதல் செய்யும்போது புள்ளிகள் சேகரித்து அதனால் விசேட கழிவுவிலை அல்லது பணம் அல்லது விசேட பரிசுகள் பெறும் வழிமுறை) வாடிக்கையாளர்கள் - சில்லறை வர்த்தக விசுவாசத்திட்டம்" இது.

g) சுற்றலைற், தொலைத்தொடர்பு ஊடாக தெரு விளம்பர பலகைகள் அபிவிருத்தி, தயாரிப்பு மற்றும் அதன் பின்னால் உள்ள விளம்பர நிபுணத்துவம் (Marketing Concept).

h) எனது நண்பரும் ஜேர்மன் பொருளாதார அமைச்சருமாக இருந்த பிலிப் றொஸ்லர் (Phillip Rössler) உடன் கலந்தாலோசித்து ஜேர்மன் தொழில் நுட்பக்கல்லூரியை அறிவியல் நகர், கிளிநொச்சியில் நிறுவியது.

i) 2004 ம் ஆண்டு ஜேர்மன் மந்திரிகள், அரசியல்வாதிகள், ஜேர்மனிய வங்கி நிர்வாகிகள், தொழில் நிறுவனங்கள், அரச அரசசார்பற்ற நிறுவன நிர்வாகிகள், நகரபிதாக்கள், மானில முதல்வர்கள் என மொத்தம் 225 நிறுவனத்தை

ஒரு குடையின் கீழ் கொண்டுவந்து 2005 ல் இருந்து இன்று வரையில் 493 திட்டங்களை ஜேர்மன் துதரகம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக இலங்கையில் நடைமுறைப்படுத்தியிருக்கிறேன். இவற்றுள் 94 திட்டங்கள் வடக்கு கிழக்கில் செயல்படுத்தப்பட்டன. இப்படியான ஒரு செயல் அமைப்பு இலங்கை தவிர்ந்து வேறு எந்தநாடுகளிலும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படவில்லை. இதில் எனது இலங்கை சிங்கள, தமிழ், முஸ்லிம் நண்பர்கள் பலமாக இருந்து உதவியுள்ளார்கள், அவர்களுக்கு இந்த நேரத்தில் எம் நன்றிகள். (Position f & g) ஸ்ரீ தற்போது உலகம்பூராக பல மிகப்பெரிய நிறுவனத்தினர் இந்த வழிமுறைகளை பயன்படுத்துகின்றனர். காப்புரிமை (Patent) பண்ணாத காரணிகளால் பலர் இலவசமாக பயன்பட வாய்ப்பாக அமைந்தது என் துர்அதிஸ்டமே.

இவைகள் எல்லாம் பலர் தெரிந்திராத எனது மைல் கற்கள்

தற்போது பொருளாதாரம், திட்டமிடல் நிதி துறை சார் வல்லுனராக பல நாடுகளில் பணிபுரிகின்றேன். எனது சுயவிபரம் வெறும் தொகுப்பாக மட்டும் அல்லாது நான் கற்றதை உபயோகிக்கவும் வாய்ப்பு கிடைக்க வேண்டும் எனவும் எண்ணுகிறேன். அதற்கு என்னால் முடிந்த அளவுக்கு முயற்சியும் செய்கிறேன். எண்ணங்களும், சிந்தனைகளும் எல்லா இடங்களிலும் என்னை பொருத்த வரையில் வாழ்க்கையில் நாம் என்ன கற்றுக்கொண்டோம் என்பது மிகவும் முக்கியம். நான் வேண்டுவது, நாம் கற்றவற்றை பயன்படுத்தும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்பதே ஆகும்.

பல்வேறு அரச, அரசசார்பற்ற சமூக அமைப்புகளோடு சேர்ந்து என்னால் இயன்றவரை சில பொது காரியங்களில் ஈடுபட்டு வருகிறேன். அன்பு, அமைதி, சமாதானம் மற்றும் சகோதரத்துவம் ஆகியவை உலகம் முழுவதும்நிலைபெற என்னால் இயன்ற வரை செயலாற்றி வருகின்றேன். இன்னும் பல்வேறு நல்ல கனவுகளோடு இந்த சமூகத்தில் என்னுடைய வாழ்க்கை ஒரு அர்த்தமுள்ளதாக மாற திட்டமிட்டுக் கொண்டிருக்கிறேன். வாய்ப்புகள் வரும்போது அதை சரியாக பயன்படுத்தக்காத்திருக்கிறேன்.

**புலம் பெயர்ந்து ஏறத்தாள 33 வருடங்களை கடந்து விட்ட உங்களது இளமைக்காலம் தாயகத்தில் எப்படியாக இருந்தது ?**

என்னுடைய பால்ய பருவத்தில் என் தந்தை என்னை தனி ஆளாக இருந்து வளர்த்தார். பண்டிதர் மு.ளு. கிருஸ்ணமூர்த்தி மற்றும் தத்துவமேதை ஜே.கிருஸ்ணமூர்த்தி ஆகியோரை தன் குருவாக ஏற்று நடந்த உன்னதமான மனிதர். என்னுடைய தாத்தா, பாட்டியின் துணையோடு என்னை நன்றாக கவனித்துக்கொண்டார். எல்லோருக்கும் இருப்பது போன்று என் இளமைக்காலத்தின் மையப்புள்ளி ஹாட்லிக்கல்லூரி தான். படிக்கும் போது சில நல்ல பழக்க வழக்கங்களை கடை பிடித்தாலும் எனது பள்ளிப்பருவம் முழுவதும் பொறுப்பான மாணவனாகத்தான் இருந்தேன்.

என் தந்தையார் வழியிலும் தேச உணர்வு, விடுதலையுணர்வு என் நெஞ்சில் குடியேறிற்று. காந்தி, நேரு, நேதாஜி முதலியவர்கள் மீது அளவுகடந்த மரியாதை இருந்தது. நான் முதல்தரமான தமிழிலக்கிய மாணவன். எனக்கு வாய்த்த பேராசிரியர்கள்

> **"பொருளாதாரம், திட்டமிடல் நிதி துறை சார் வல்லுனராக பல நாடுகளில் பணிபுரிகின்றேன். எனது சுயவிபரம் வெறும் தொகுப்பாக மட்டும் அல்லாது நான் கற்றதை உபயோகிக்கவும் வாய்ப்பு கிடைக்க வேண்டும்"**

கணபதிப்பிள்ளை, சிவா கிருஸ்ணமூர்த்தி,"சமூக. கணேசலிங்கம் தகுதிமிக்கவர்கள். தமிழ் இலக்கியம், புதுக்கவிதை, அரசியல், ஆகியவற்றிற்கு வித்திட்டவர்கள். நான் என் இளமைக்காலம் முதலே மிகச்சுதந்திரமாக உணர்ந்தேன். என் தந்தை என்னை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தியது இல்லை. இதனால் என் எல்லா ஆர்வங்களுக்கும் நல்ல தீனி கிடைத்தது.

**ஜெர்மனியின் அரசியல் கட்சியானசோசலிச ஜனநாயக கட்சியில் (FDP) அடிப்படை உறுப்பினராக இருக்கின்றீர்கள் .அதில் உங்கள் பங்களிப்பு எப்படியாக இருந்தது ?**

இங்கு ஒன்றை பேச்சுவழக்கில் கூறுவார்கள் " அரசியல் இல்லாமல் பொருளாதாரம் இல்லை. பொருளாதாரம் இல்லாமல் அரசியல் இல்லை". இது நடைமுறையில் உண்மைதான். எனது வளர்ச்சிக்கு தேவையாயும் தவிர்க்க முடியாததாகவும் அரசியல் இருந்தது. அதனால் 25 வருடங்களுக்கு முன்னர் இந்தக்கட்சியில் அங்கத்துவமானேன். மிகக் கூடுதலான யூதர்கள் மற்றும் சுயதொழில் புரிவோரை அங்கத்தவர்களாக கொண்ட ஒரு பலமான கட்சி.

கட்சியின் பல்வேறு அரசியல் செயல்பாடுகள், திட்டம் வகுத்தல் ஆகியவற்றில் எனது பங்களிப்புகள் உண்டு, தேர்தல்காலங்களில் ஒருசிலரது தேர்தல் பிரச்சாரப் பிரிவில் அவர்களது வெற்றிக்கு பணியாற்றிய அனுபவங்கள் நிறைய உண்டு. அவர்கள் ஜேர்மனிய அரசின் சபாநாயகராக, சுகாதார அமைச்சராக, உள்நாட்டு அமைச்சராக, பொருளாதார அமைச்சராக வெளிநாட்டு அமைச்சராக இருந்திருக்கிறார்கள். இதனூடாக சர்வதேசரீதியாக நல்ல பலமான தொடர்புகளையும், நட்புகளையும், ராஜதந்திரிகளினது, அரசியல்,பொருளாதாரதுறைசார் வட்டத்துக்குள் நம்பிக்கை பெறக்கூடிய வாய்ப்பு கிடைத்துள்ளது.

**தாயகத்தில் ஏற்பட்ட சமாதான காலத்தில் ஜெர்மனியில் நடைபெற்ற சமாதான பேச்சுவார்த்தையில் முக்கியஅனுசரணையாளராக இருந்திருக்கின்றீர்கள் அப்பொழுது உங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் எப்படியாக இருந்தன ?**

அரசுத் தரப்பு & புலிகளின் சமாதான பேச்சுவார்த்தையில் முதல் பேச்சுவார்த்தை தொடங்கி மூன்றாவது சுற்றுப் பேச்சுவார்த்தை அடுத்தடுத்து நடந்த அமர்வுகளில் சுயாட்சிக்கான அதிகாரப் பகிர்வுக்கு அரசுத் தரப்பு ஒத்துக்கொண்டது.

நான்காவது சுற்றுப் பேச்சுவார்த்தை தாய்லாந்து நாட்டின் நாக்கோன் பத்தோம் என்னும் நகரில் 2003-ஆம் ஆண்டு

**சில சர்வதேச பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் மாணவர் களுக்கு புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. வரும் கல்வி ஆண்டில் இருந்து 16 வயதுக்குட்பட்ட மாணவர்கள் பேஸ்புக், ட்விட்டர், வாட்ஸ் ஆப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களை பயன்படுத்தக்கூடாது.**

ஜனவரி 6 முதல் 9-ஆம் தேதிவரை நடைபெற்றது. பேச்சுவார்த்தைகளின் இறுதியில் உலக நாடுகளிடமிருந்து வடக்கு-கிழக்குப் பகுதிகளின் புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுக்காகப் பெறப்படும்

நிதியினை யார் பெறுவது, எவர் பொறுப்பில் வைத்துக் கையாளுவது என்பதும், பாதுகாப்புவலையைப் பகுதிகளில் தமிழர்கள் குடியேற்றம், குறித்தும் அவ்வாறு குடியேறும் மக்களில் விடுதலைப் புலிகள் அமைப்பினர் இருந்தால், அவர்கள் ஆயுதங்களைக் களையவேண்டும் என

விரிவாக விவாதிக்கப்பட்டது. இறுதித் தீர்மானமாக, உலக நிதியளிப்போரிடமிருந்து பெறப்படும்

நிதியைக் காப்பது, உலக வங்கியின் பொறுப்பில் விடுவது என்றும் முடிவானது.

ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தை, 7-8, பிப்ரவரி 2003. பாலசிங்கத்தின் உடல்நிலை மோசமானதன் காரணமாக, அவரால் அதிகதூரம் பயணம் செய்யமுடியாத நிலையில், ஜெர்மனியின் பெர்லின் நகரத்தில் உள்ள நோர்வே தூதரக வளாகத்தில் நடைபெற்றது

நோர்வே மற்றும் பேச்சுவார்த்தைக்குழுவின் வேண்டுகோள்களுக்கு அமைய ஜேர்மனியை தேர்ந்தெடுத்ததில் பல பின்புல அரசியல், பொருளாதார, ராஜதந்திரக் காரணங்கள் உண்டு. எல்லாவற்றையும் நான் இங்கு கூறமுடியாது. ஜேர்மனியர், ஐரோப்பாவின் ஒரு முக்கிய வல்லரசுநாடு,

தொழில் நுட்பத்தில், அபிவிருத்தியில் முன்னணியில் இருப்பவர்கள், பலமான சட்டங்களை, வெளியுறவுக் கொள்கைகளை கொண்டவர்கள், மற்றய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு பணத்தை வாரி இறைப்பவர்கள்,

அதைவிட போருக்கு பின்னரான நாட்டின் மீள் கட்டுமானத்தில் மிகுந்த அனுபவம் உள்ளவர்கள் என்ற காரணங்களால் ஜேர்மனையும் பின்தளத்தில் உள்வாங்க போடப்பட்ட திட்டத்தின் ஆரம்பம்தான் ஜேர்மனின் தெரிவு. இதற்கு ஜேர்மன் அரசு தனது 5 பேர் அடங்கிய குழுவை தெரிவுசெய்திருந்தது. அதில் நானும் ஒருவன், மிச்சப்படி நேரடியான பங்காற்றல் எல்லாம் நோர்வேயின் தலைமையில், வழிகாட்டலில் மாத்திரமே நடைபெற்றது.

இந்த ஐந்தாவது சுற்றுப் பேச்சுவார்த்தைத் தொடங்க இருந்த

சிறிது நேரத்துக்கு முன்பாக இலங்கை கடற்படையானது, புலிகளின் படகொன்றை வழிமறித்தது என்றும், அதிலிருந்த 3 கடற்புலிகள் சயனைட் அருந்தத் தயாராக இருப்பதாகவும் கடற்பிரிவுத் தலைவர் சூசை, பேர்லினுக்கு பாலசிங்கத்திடம் தெரிவித்தார். அங்கிருந்த அமைச்சர் மிலிண்டா மோரகொடாவிடம், விளைவுகள் மோசமாவதைத் தடுக்கவேண்டும் என்று பாலசிங்கம் கேட்டுக்கொண்டார். இந்தச் செய்திப் பரிமாற்றத்துக்கிடையே 3 கடற்புலிகளிடமிருந்தும், தகவல் தொடர்பு இல்லை என்று மீண்டும் சூசையைத் தொடர்புகொண்டு தெரிவித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ஜெனரல் ஃ புருகோவ்ட், அந்த மூன்று கடற்புலிகளும் சயனைட் அருந்திய நிலையில் படகு தகர்க்கப்பட்டது என்று பேர்லினுக்கு தகவல் தெரிவித்தார். அத்தோடு அரசுத் தரப்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை வடக்கு-கிழக்கு புனரமைப்புப் பணிகளுக்கும் போதிய நிதியாதாரம் வழங்கப்படவில்லை மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லமுடியவில்லை போரில் இடப்பெயர்வு ஆனவர்களை மீண்டும் அவர்களது இடத்தில் குடியமர்த்த முடியவில்லை பாதுகாப்புக் காரணங்கள் என்று ராணுவம் மறுக்கிறது என்றும் புலிகளால் புகார் கூறப்பட்டு பேர்லின் பேச்சுவார்த்தை சுமூகமாக நடக்காமல் குழப்பத்தில் முடிந்தது அனைவரும் அறிந்ததே. ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தை ஜப்பான் நாட்டின் ஹக்கோனே என்னும் இடத்தில் நடைபெற்றது (18-21, மார்ச் 2003).

இரண்டாவது விடயம் விடுதலைப் புலிகளது அரசியல்பிரிவு இலங்கையிலுள்ள ஜேர்மன் தூதரகத்தினூடாக ஜேர்மன்

அரசியல் யாப்பு, பாரளுமன்ற அமைப்புமுறை, இலங்கை பாரளுமன்ற கட்டமைப்பின் பாதகங்கள் பற்றி ஆராய்வதற்கு ஜேர்மன் அரசை அணுகியிருந்தபொழுதும் நான் கடமையாற்றியுள்ளேன்.

## கணணித்துறையில் கணனியின் மென்பொருட்களது காப்புரிமைகள் எப்படியாக இருக்கின்றது ?

1983 ல் உலகை கற்பனை செய்து பாருங்கள்.! கணனி இல்லை, Smart Phone or Iphone இல்லை, Laptop இல்லை, சாமானியர்களுக்கு கணனிகளை அணுகும் வசதியும் இருக்கவில்லை. தொழில்நுட்ப திறன் கொண்டவர்களுக்கே அது சாத்தியமாக இருந்தது. அவர்களும் தரவுகளை

கையாளவே கம்ப்யூட்டரை பயன்படுத்தினர். 1990 வரை, ஆரம்பகால இமெயில் அமைப்பு இணையத்தை பயன்படுத்தவில்லை.

உலகம் பூராக 1989 ல் காப்பி ரைட் சட்டம் (Copy right law), மென்பொருள் (Software) உரிமையை காக்கும்

வகையில் மாற்றப்பட்டன.1990 1994 களில் தான் மென்பொருள் காப்புரிமையை (software patent) உலக நாடுகள் ஏற்றுக் கொள்ளத் துவங்கியது. இந்தியாவில் காப்புரிமைச்சட்டம் 2004ல் தான் நடைமுறைக்கே வந்தது. பல நாடுகளில் இன்னும் காப்புரிமைச்சட்டம் நடைமுறையிலே இல்லை என்பதையும் குறிப்பிட வேண்டும்

மென்பொருட்கள் உரிமையடிப்படையில் இரண்டு வகையுண்டு.

1.காப்புரிமை கொண்டு பெரும்பாலும் விற்பனையிலோ,
சிலசமயம் விலையில்லாமலும் வெளிவருபவை.

2. கட்டுப்பாடுகள் இல்லாத உரிமையில் பெரும்பாலும் இலவசமாக வெளிவருபவை.

இந்த இரண்டாவது வகையே கட்டற்ற மென்பொருள் என்று பொதுவாக விலையில்லாமலும், எந்தவிதக் காப்புரிமை இன்றியும் விநியோகிக்கப்படுகிறது. இதனை யாரும் மேம்படுத்தலாம், யாரும் இலவசமாகப் பயன்படுத்தலாம். இதனால் தொழில்நுட்பம் எளிதில் அனைவருக்கும் வந்தடைகின்றது, அதன் பலனை

ஒட்டுமொத்தச்சமூகமும் அனுபவிக்கலாம். இவற்றை யார் உருவாக்குகிறார்கள்? பெரும்பாலும் தன்னார்வலர்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து உருவாக்கியும், அதை மேம்படுத்தியும் வளர்க்கிறார்கள். இவர்கள் வருமானத்திற்கு என்ன செய்வார்கள்? பொதுவாக நேரடி லாபம் இல்லாவிட்டாலும், நன்கொடைகள், சேவைக்கட்டணம், விளம்பரம் போன்ற வழிகளில் பலனடைகிறார்கள். காப்புரிமை கொண்ட மென்பொருட்களில் பயன்படுத்தப்பட்டுள்ள யுக்திகள் வெளிப்படையாக இல்லாததாலும், பணம் கொடுத்து வாங்கியவர்கூட நிரல்களை மாற்றியமைக்க முடியாததாலும் கொள்கையடிப்படையில் கட்டற்ற மென்பொருளுக்கு பெரிய ஆதரவு உண்டு.

**சமூக வலைத்தளங்கள் மீதான அண்மைக்காலமாக விதிக்கப்பட்டிருக்கும் புதிய கட்டுப்பாடுகள் எப்படியாக இருக்கின்றது ?**

இளம் பருவத்தினர் செல்போன், கணினி உள்ளிட்ட தொழில்நுட்ப கருவிகளை கணிசமாக பயன்படுத்துகின்றனர். போதிய புரிதல் இல்லாத வயதில் மாணவர்கள் சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவதால், பல்வேறு தீமைகள் ஏற்படுவதாக சமீபத்திய கருத்து கணிப்புகள் தெரிவிக்கின்றன.

சில சர்வதேச பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் மாணவர் களுக்கு புதிய கட்டுப்பாடுகளை விதித்துள்ளன. வரும் கல்வி ஆண்டில் இருந்து 16 வயதுக்குட்பட்ட மாணவர்கள் பேஸ்புக், ட்விட்டர், வாட்ஸ் ஆப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களை பயன்படுத்தக்கூடாது. மீறினால் மாணவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன் பயனாளரின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தல் முக்கியமாகப் பார்க்கப்படுகிறது. தகவல் பரிமாற்றங்கள், நபர்களின் செயல்பாடுகள் கண்காணிக்கப்படுகின்றன

சமூக வலைத்தள குற்றங்களை தடுப்பதற்காகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளன.

**புலம் பெயர் சமூகத்தில் நிகழ்ந்துவரும் வங்கி கடன் அட்டைகள் மோசடிகள் பற்றிய உங்கள் பார்வை எப்படியாக இருக்கின்றது ? இந்த வங்கி கடன் அட்டை மோசடி அறிவியல் ரீதியில் எவ்வளவு தூரத்துக்கு சாத்தியமானது ?**

இது அறிவியல், தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமானது என்பது என்னுடைய பார்வை மட்டுமல்ல. அதனால் தான் இந்த கேள்வியும் இங்கே இடம் பெற்றுள்ளது என்பதை நான் அறிவேன். இன்றைக்கு உலகின் எந்த அளவிற்கு வங்கிகளின் நடவடிக்கைகள் மக்களின் நலன் கருதி கணினி மயமாக்கப்பட்டுள்ளதோ அந்த அளவிற்கு அதற்கு எதிரான நுட்பங்களும் தோன்றி இருக்கின்றன. நியூட்டனின் விதிப்படி ஓர் வினைக்கு எதிர் வினை உண்டு என்பது போல், இந்த மோசடிகள் மிக நுட்பமாக தொழில்நுட்ப அறிவியல் பூர்வமாக மிகப் பெரிய அளவில் பின் பலத்தோடு திட்டமிட்டு செயல்படுகின்றன. இது போன்ற மோசடிகளை ஆய்வு செய்து இதைத் தடுப்பதற்கும், குறைப்பதற்கும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். விஞ்ஞானம் என்பது காலத்திற்கேற்ப மாற்றத்துக்குரியதும் மற்றும் மேம்படுத்தக்கூடியதுமாகும். இதை கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். இது சம்பந்தப்பட்ட சட்ட ஒழுங்கு நிலைகளும், தண்டனைகளும் காலத்திற்கேற்றப்படி கடுமையாக்கப்பட வேண்டியதும் கட்டாயம்.

**முகனூல் போராளிகள் பற்றிய உங்கள் மதிப்பீடுதான் என்ன ?**

a) முகனூல் இன்றைய 'நவீன இளைஞர்களின் முகவரி. பல் துலக்காமல் கூட இருக்க முடியும், முகனூலில் கருத்து போடாமல் இருக்க முடியுமா என்ற நிலை இப்போது. நட்பின் இலக்கணத்திற்குள் பேஸ்புக் கணக்கு வைத்திருப்பது ஒரு நிபந்தனையாக மாறி வருகிறது. எனினும் பேஸ்புக்கில் அனைத்து உணர்ச்சிகளும் ஒரு வணிக நோக்கத்திற்காகவே திரட்டப்படுகின்றன. ஒரு கவிதையையோ இல்லை படத்தையோ பகிர்ந்தோ புரட்சியாளர் ஆனவர்கள் ஆயிரம்பேர். இந்த மாய உலகம் உருவாக்கியிருக்கும் உணர்ச்சி உண்மை உலகத்தோடு உள்ள உறவை மறைத்து வருகிறது. புரட்சியையும், காதலையும் நட்பையும் கூட உரமாக போட்டு சமூக வலைப் பின்னலை உருவாக்கியிருக்கிறது பேஸ்புக் நிறுவனம். இப்படி ஒரு சமூக கருத்துப் பரிமாற்றத் தளமாக பேஸ்புக் வளர்ந்துள்ளது. பேஸ்புக் உங்களையும் உங்களது விருப்பங்களையும் விற்பனை செய்கிறது. அந்த விற்பனை உண்மையில் வணிக நிறுவனங்களின் பொருட்களை விற்பனை செய்யஉதவுகிறது. இறுதியில் பேஸ்புக்கின் உண்மையான உணர்ச்சி இந்த சரக்கு உணர்ச்சிதான் என்றால் முகநூல் புரட்சியாளர்கள் ஒத்துக்கொள்வார்களா?

b) எகிப்தில் நடந்த புரட்சியில் பேஸ்புக் முக்கிய பிரச்சார ஊடகமானது போல இங்கே அதிகம் பேர் போராளிகள் போல் குரல் கொடுப்பார்கள். ஆனால் காரியம் என்று வந்துவிட்டால் காணாமல் போய்விடுவார்கள். யார் வீட்டுப்பிரச்சினைக்கோ முன்னின்று குரல் கொடுக்கும் இந்த போராளிகள். சொந்தப்பிரச்சினையில் முக்கால்வாசிப்பேர் மவுனம்தான் காக்கின்றனர். முன்பின் தெரியாதவர்களிடம் சண்டை போடுவது என்பது இவர்களுக்கு ஒரு பொழுது போக்கு. சரி யாருக்காக சண்டை போடுகிறார்கள் என்று பார்த்தால் அனேகம்பேர் இவர்கள் சார்ந்த கட்சிக்காகவும், கட்சி தலைவர்களுக்காகவும் சண்டை போடுவார்கள். பயனற்ற இந்த சண்டையின் விளைவு ஏதேனும் நல்லது நடக்குமா? அதுவும் கிடையாது.

c) இவர்கள் முயற்சிப்பது எல்லாம் எப்படியாவது நாமும் முகனூலில் ஒரு பிரபலம் என்று ஆக வேண்டும் என்பதுதான். முயற்சித்தால் எத்தனையோ சீர்திருத்தங்களை இதில் உள்ள பிரபலங்கள் கொண்டு வரலாம். ஆனால் பொழுது போக்குக்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு வலைதளம் இன்று வெறும் சாக்கடை போல் ஆகிவிட்டது ஒரு சிலரால்.

**வளர்ந்துவிட்ட கணனியுகத்தில் தமிழை பொறுத்தவரையில் எழுத்துப்பிழைகள் அதிகமாக காணப்படுகின்றன இவைகளுக்கு கணனியியலில் தீர்வுக்கான சாத்தியங்கள் உண்டா?**

**தமிழினம் மற்ற சர்வதேச இனங்களுடன் ஒப்பிடுகையில்**

**தமிழில் தான் பிழைகளுடன் நூல்கள் வெளிவருகின்றது என்ற குற்றச்சாட்டைப் பொதுவாக வைக்காமல், அனைத்து மொழிகளிலுமே இந்த தவறு இருக்கின்றது என்பதாக எடுத்துக் கொள்வோம்.**

**படித்தவர்கள் பார்த்ததையும் நினைத்ததையும் எழுத்திலே வடிக்கும் ஆற்றல் பெற்றவர்கள். அவர் தம் எழுத்தில் பிழைகள் இருக்கலாமா?**

a) இங்கு தமிழ் மென்பொருளுக்கு ஆய்வு செய்யவே ஆட்கள் குறைவு. மேலும் உருவாகும் மென்பொருளையும் வாங்கி ஆதரிக்கும் பொதுப்போக்கு எம்மவர் மத்தியில் இல்லை. மென்பொருளுக்கான நன்கொடைகள் குறிப்பிடுமளவு இல்லை. அதிகமாக இலவசங்களுக்குப் பழக்கப்பட்ட எம்மக்கள் சேவைக் கட்டணத்தை விரும்புவதில்லை. சிறிய சமுதாயம் என்பதால் ஆய்வுகளுக்கான செலவு விகிதம் அதிகம். "தமிழை வைத்து காசு பார்க்கிறார்கள்" என்ற பொதுச்சிந்தனையால் தமிழ் மென்பொருளுக்கு வணிகச்சந்தை அழிந்துவருகிறது.

b) இன்று தமிழ்ப்பிழை திருத்திகளைத் தேடவேண்டிய காலமிது. இணையத் தமிழில் சந்திப்பிழைகள், வாக்கியப்பிழைகள், எழுத்துப்பிழைகள், மரபுப்பிழைகள் உட்பட பலவானவை மலிந்து காணக்கிடைக்கிறது. சிறியவர், பெரியவர், புதியவர், பிரபலமானவர் என எங்கும் பிழைகளைக் காணலாம். சிறந்த எழுத்தாளர்களின் எழுத்திலேயே பிழைகளைக்காணலாம். அவை அப்படைப்பைத் திருத்திய ஆசிரியரின் கவனக்குறைவாகவும் இருக்கலாம். தமிழ்த் தளங்களின், தமிழ்ப்பயனர்களின், தமிழ் வாசகர்களின் பரவலுக்கேற்ப தமிழ் திருத்திகள்(Editor) புழக்கத்தில் அதிகமில்லை.

c) ஆங்கில நூல்களில் பிழைகள் மிக அரிதாகவே காணப்படும். ஆனால் தமிழ் நூல்களில் பிழைகள் மிகுதி. முன்பு நூலின் பிழைகளை "பிழை திருத்தம்" என்னும் தலைப்பில் வெளியிட்டனர். இப்போது அவ்வாறு செய்வதில்லை. காரணங்கள் இரண்டு.

1. பிழைகளைத் தொகுத்து வெளியிட்டால் பிழை திருத்தமே நூலின் பல பக்கங்களை நிறைத்துவிடும்
2. நூலாசிரியர்க்கு உண்மையாக தம் நூலில் என்ன பிழைகள் உள்ளன என்பதே தெரியாது.

தமிழைப் பிழையின்றி எழுதத்தெரியாதவரெல்லாம் எழுத்தாளராகவும் நூலாசிரியராகவும் இருக்கும் இழிநிலை எம் தமிழ்ச்சமூகத்தில் உள்ளது. இது தமிழுக்கு மட்டுமல்லாமல் உலகின் அனைத்து மொழிகளிலும் இந்த சூழ் நிலையைக் காணலாம். எனவே தமிழில் தான் பிழைகளுடன் நூல்கள் வெளிவருகின்றது என்ற குற்றச்சாட்டைப் பொதுவாக வைக்காமல், அனைத்து மொழிகளிலுமே இந்த தவறு இருக்கின்றது என்பதாக எடுத்துக் கொள்வோம். ஒரு நூலாசிரியர் தனது எழுத்தையும், அதில் உள்ள சிந்தனையும் வெளிவர எடுக்கும் முயற்சியில் மொழியும், மொழியில் உள்ள இலக்கணப் பிழையும், சில சமயம் எழுத்துப் பிழையையும் பெரிதாக எடுத்துக் கொள்வதில்லை. மேலும் இது அரிதாக காணப்படும் ஒரு விஷயமே. எனவே, திரைப்படங்களுக்கு சென்சார் என்ற அமைப்பு இருப்பதுபோல எழுத்துக்கும் ஒரு குழு அமைத்து, ஒரு நூல் வெளிவரும் முன்பு அதை நூலாசிரியர் குழுமத்துக்கு அனுப்பி அவர்களை கலந்தாலோசித்து பின்னர் வெளி வந்தால் இந்த சூழ் நிலை மாறலாம்.

d) சமூகம் மேம்பட மாற்றுச்சிந்தனை மிகவும் முக்கியம். அதுவும் கல்வியில், கணனியுகத்தில், செயல்-வழி கற்றல் மற்றும் புதுச்சிந்தனை இல்லாமல் எந்த மாற்றமும் சாத்தியம் இல்லை. சுயதொழிலும், கல்விக்கான மாற்றமும் இன்றைய அவசியம். ஆனால் இவை இன்று எந்த தளத்திலும் அதிகம் பேசப்படாத ஒன்றாகவே உள்ளது. தமிழில் தோன்றும் ஒரு பிழை, உடலில் ஒரு அழுக்கு! அழுக்கில் உடல் அழிந்து போகும். அதனால் பிழையில்லாமல் தமிழ் வாழக் காப்பது எம் கடமை.

பிழையோடு எழுதுவது மொழிக்குத் தீங்கு பிழை நீக்கி எழுதுவது மொழித் திறனுக்கு அறிகுறி. எனவே பிழைகளையும் அவற்றைக் களைந்தெறியும் முறைகளையும் நாம் காணவேண்டும். அதற்கான திட்டங்கள் வகுக்கப்படல் வேண்டும். செயல்படுத்தல் வேண்டும். மிக நீண்ட முக்கிய பணி இது

**இன்றைய தமிழ் இலக்கியத்துறையில் இலக்கியப்பிரபலங்கள் சர்ச்சைகளை உருவாக்குவது மலிந்து காணப்படுகின்றது. இத்தகைய போக்குகளை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள் ?**

பிரபலங்கள் என்றாலே சர்ச்சையில் சிக்காதவர்கள் யாரும் இல்லை. அந்த வகையில் சிலர் சர்ச்சைக்காகவே இலக்கியத்துறைக்கு வந்தவர்கள், பிரபலமானவர்கள் என கூறலாம். இவர்கள் அடிப்படையில் சுய விளம்பரப் பிரியர்கள். அனைத்துமே சமூக அளவில் சில வார்த்தைகளை உதிர்த்து கொஞ்சம் சர்ச்சைகளை உருவாக்கக் கூடியவர்கள். அவர்கள் பேசப்பட வேண்டும்!! இதுதான் அவர்கள் நோக்கம். இதுவும் ஒருவித வியாபாரத்தந்திரம் தான். மற்றவர்க்கு முன்னோடியாக இருக்க வேண்டிய இவர்கள் தங்கள் இருக்கும் அந்தஸ்து மற்றும் பொறுப்புகள் உணர்ந்து வார்த்தைகளை பக்குவமாக கையாளுவார்கள் என நம்புவோம்.

**புலம் பெயர்நாடுகளில் இருந்து கொண்டு சகல கலச்சார விழுமியங்களையும் அனுபவித்துக்கொண்டு, போரினால் பாதிப்படைந்து அதிலிருந்து மீண்டு வருகின்ற சனங்களைப் பார்த்து "தாயகத்தில் கலாச்சாரம் சீரழிந்து விட்டது" என்று அலறுபவர்கள் பற்றிய உங்கள் மதிப்பீடுதான் என்ன ?**

மொழி கலாச்சாரம் இவை இரண்டும் நம் கண்கள், நாம் எந்த அளவு இவற்றை போற்றுகிறோமோ அந்த அளவிற்கு நமது இனத்தின் பெருமை உலகுள்ளவரை பறைசாற்றும். மாற்றம் மாற்றம் என்று சொல்லி, மாறுதலுக்கு உள்ளான இனமாகவும் காலத்தின் நாகரீகத்தின் ஈர்ப்பாலும் மாறுபட்ட அடையாளங்களை கொண்டும் இன்று எமது தேசம் சீரழிந்து நிற்கின்றது என்பது உண்மைதான். சாதனைகள் படைத்தும் நிர்வாகத்தில் ஆளுமை கொண்ட ஆற்றல் மிக்க பெண்கள் இன்று பல ஆபத்தான வாழ்க்கைக்கு தள்ளப்பட்டும், பாலியல், அச்சுறுத்தல்கள், என பல கோரதாண்டவம் ஆடத்தொடங்கியுள்ள நிலையில் சுய பாதுகாப்பற்றும் நிற்கதியாக நிற்கின்றார்கள். குடிப்பதும், ஆடம்பர வாழ்வுக்கும் அதிகமாக பணத்தை வாரி இறைக்கின்றார்கள். அதுமட்டும் இல்லை, யாழ்மாவட்டத்தில்

மட்டும் 600.000 லட்சம் லீற்றர் மதுபானம் விக்கப்படுவதாகவும் இலங்கை மாவட்டத்தில் முன்னிலைக்கு வந்துள்ளது. 2009 ஆண்டுக்குப்பின்னர்தான் இந்த நிலைமை.

இவர்களுக்கு பணம் வெளிநாட்டில் உள்ள இவர்களது உறவினர்கள் தான் அனுப்புகின்றனர்கள். அதுமட்டும் இல்லாமல் வெளிநாட்டில் இருந்து தாயகத்துக்கு வந்து அங்குள்ள இளசுகளுக்கும் குடிவகைகளை விதம் விதமாக வாங்கி கொடுத்து தாமும் வயது வித்தியாசம் இல்லாமல் குடிக்கின்றார்கள், புகைக்கிறார்கள், கொலை கொள்ளை கலாச்சாரத்துள் மூழ்கித்திழைக்கிறார்கள் புலம்பெயர் தேசத்தில் இருந்து வரும் அறிவு சாலிகள். புலம்பெயர் சமூகத்திற்கும் இந்த சீரழவுகளில்

**வாசகருக்கு-ஒருபடைப்பாளிஒன்றிரண்டுநல்லபடைப்புக்களைத் தந்தால் கூட அவர் கவனிக்கக்கூடியவர் என்றுதான் எமது ஈழத்து மரபும் வாழ்வும் கற்றுத்தந்திருக்கின்றது.**

பங்குண்டு. இவர்களை இனம் கண்டு எமது இனத்தின் கலச்சார விழுமியங்களை, அருமை பெருமைகளை காப்பாற்ற வேண்டிய கடமை, விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய தேவை அனைவருக்கும் உள்ளது. காலத்தின் தேவையும் இதுவே.

## சமகால தமிழ் இலக்கியம் பற்றிய உங்கள் புரிதல்தான் என்ன ?

சமகால இலக்கியம் என்பது பரந்த தளத்தில் அணுக வேண்டியது. விரிவான வாசிப்பும், ஆழமான விமர்சனப்பண்பும் இல்லாது ஒரு கருத்தை முன்வைத்தல் என்பது கடினமானது. ஈழத்திலிருந்து எனக்கு வாசிக்க கிடைத்த பிரதிகள் மிகச் சொற்பமே. எனவே ஈழத்திலக்கியம் என்ற வகைக்குள் ஈழத்திலிருந்தும் புலம்பெயர்ந்தும் வந்த படைப்புக்களை சேர்த்து, சில ஒரு கருத்தை முன்வைக்கலாமென நினைக்கின்றேன்.

போர் தின்றுவிட்டுப் போயிருக்கின்ற ஈழத்துச் சூழலில், இன்று இலக்கியம் பேசுவது கூட ஒருவகையில் அபத்தமானது. 2000ம் ஆண்டுக்குப் பிறகான ஈழத்திலக்கியத்தில், மிக நீண்டகாலமாக புனைவுகளின் பக்கம் தீவிரமாக இயங்கியவர்கள் என,

எவரையேனும் கண்டுகொள்ளுதல் சற்றுக் கடினமாகவே இருக்கிறது.

ஈழத்திலக்கியம் என்பதே அவற்றின் நிலப்பரப்புகளுக்கும், கலாசார தளங்களுக்கும் ஏற்ப உட்பிரதேசங்களிலேயே வித்தியாசப்படுபவை. உதாரணமாக யாழில் வெளிவரும் படைப்புக்களுக்கு, பிரயோகிக்கும் விமர்சன அலகுகளை கிழக்கிலோ, மலையகத்திலோ முன்வைக்கமுடியாது. முற்றிலும் வித்தியாசமான சூழல் கிழக்கினதும் மலையகத்தினுடையதுமாகும்.

புறச்சூழல்களை முன்வைத்தே நாம் படைப்புக்களை அணுக வேண்டியிருக்கின்றது. அதேபோன்று வடக்கிலிருந்து துரத்தப்பட்ட முஸ்லிம்களினதும், கிழக்கில் இருக்கும் முஸ்லிம்களினதும் வாழ்வு நிலை என்பது கூட முற்று முழுதிலும் வேறுபடக்கூடியது. இந்த வித்தியாசங்கள் அவர்களின் படைப்புக்களில் ஊடாடுவதை விளங்கிக்கொள்ளாது ஒரு வாசிப்பை நாம் எளிதாகச் செய்துவிட முடியாது. இவ்வாறே முற்றுமுழுதாக வாழ்வு குலைக்கப்பட்டு புதிய நாட்டுச் சூழலில் வாழத்தொடங்கும் புலம்பெயர்ந்தவர்களுக்கும் வேறுவிதமான பிரச்சினைகள் இருக்கின்றன.

ஷோபாசக்தியின் "கொரில்லா", முத்துலிங்கத்தின் "மகாராஜாவின் புகைவண்டி" ஆழியாளின் "உரத்துப் பேச"வும்,அகிலனின் "பதுங்கு குழி நாட்களும்", சக்கரவர்த்தியின் "யுத்தம்", திருமாவளவன் கவிதைகள், தேவகாந்தனின் "கதா காலம்", தாமரைச்செல்வியின் "அழுவதற்கு நேரமில்லை",.புஷ்பராஜனின் "மீண்டும் வரும் நாட்களும்", பாலகணேசனின் "வர்ணங்கள் அழிந்த வெளியும், பொ.கருணாகரமூர்த்தியின் "கூடு கலைதலும்", "பெர்லின் இரவுகளும்", இலண்டனிலிருந்து பத்மநாப ஐயர் இப்படி பலரை உதாரணமாகக் கொள்ளலாம்.

வாசகருக்கு-ஒருபடைப்பாளிஒன்றிரண்டுநல்லபடைப்புக்களைத் தந்தால் கூட அவர் கவனிக்கக்கூடியவர் என்றுதான் எமது ஈழத்து மரபும் வாழ்வும் கற்றுத்தந்திருக்கின்றது. இந்த மரபு இப்போதுதான் தொடங்கியிருக்கின்றது என்பதல்ல, சங்ககாலக் கவிஞர்களை இப்போதும் நினைவுகூர எங்களுக்கு அவர்களின் ஒன்றிரண்டு பாடல்களே போதுமாயிருக்கிறது அல்லவா?

இந்தக் காலகட்டத்தில் இணையம் பல புதிய படைப்பாளிகளை அடையாளங்காட்டுகின்றது. இணையத்தில் ஈழத்திலிருந்து எழுதிக்கொண்டிருந்த நிவேதா, சித்தாந்தன் போன்றோரின் கவிதைகளும் கவனத்தைக் கோருபவையாக இருந்திருக்கின்றன.

ஏன் இவர்களின் படைப்புக்களோடு இவர்களின் புறச்சூழல் குறித்தும் குறிப்பிடுகின்றேன் என்றால், இவர்களைப் போன்ற பல படைப்பாளிகள் பலர் இவ்வாறான இழப்புக்களோடும் துயரங்களோடும் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்கள். எத்தகைய நெருக்கடிகளிலிருந்து ஈழத்துப் படைப்புக்கள் எழுதப்படுகின்றன என்பதை

அறிதல் கடினமே.

ஈழத்திலக்கியம் (ஈழம் ரூ புலம்பெயர்) கடந்த பத்தாண்டுகளில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்தியிருக்காவிட்டாலும், கவனம் பெறும் படைப்புக்களை இந்தச் சகாப்தத்தில் தந்திருக்கின்றது. அவற்றுக்கு ஆதாரமாய் ஏற்கனவே குறிப்பிட்ட படைப்புக்கள் சில உதாரணங்களாகும்.

பெரும் சனத்தொகையைக் கொண்ட, எங்களைப் போலன்றி போரில்லாச் சூழ்நிலையிருந்தும் தமிழகத்திலிருந்து விரல் விட்டு எண்ணக்கூடிய முக்கிய படைப்புக்களே வந்திருக்கின்றன.

ஈழ, புலம்பெயர் படைப்பாளிகளில் அனேகர் ஒருகாலத்தில் உற்சாகமாய் நம்பிக்கை அளிக்கக்கூடியதாக இயங்கிக்கொண்டு இருப்பதும் பிறகு சடுதியாக ஒருவித உறைநிலைக்குப் போவதும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

குறிப்பிடும்படியான போர்க்கால இலக்கியங்களோ, அல்லது புலம்பெயர் வாழ்வின் நெருக்கடிகளோ மிக விரிவான தளத்தில் பதியப்படவில்லை. 3 தசாப்த காலத்தை தங்களுக்குள் பறிகொடுத்த ஈழத்தமிழரிடமிருந்து உடனடியாக இவ்வாறான படைப்புக்கள் வரவேண்டும்.

நமக்கு விதிக்கப்பட்ட புறவயமான வாழ்வுச்சூழலை மட்டும் காரணங்களாய்க் காட்டி நாம் தப்பித்துவிடவும் முடியாது. ஏன் இன்னும் எமது படைப்புக்கள் தமது தளத்தை உலக அளவிற்கு

விரிவடையவில்லை என்று யோசிக்கும்போது ஒழுங்கான விமர்சன மரபு தொடர்ச்சியாக வளர்த்தெடுக்கப்பட்டவில்லை என்பது முக்கிய காரணமாய்த் தோன்றுகின்றது. நம் படைப்பாளிகள் சக படைப்பாளிகளிடையோ வாசகர்களிடையோ விரிவான உடையாடல்களை நிகழ்த்தாது தங்களின் சாளரங்களை இறுக்க மூடிக்கொண்டிருப்பது இன்னொரு காரணமாக இருக்கக்கூடும். மற்றும் நாம் இன்னும்
அரசியல், சினிமா தொடக்கம் இலக்கியம் வரை இந்தியா மீதான அடிமை மோகத்திலிருந்து வெளியே வரவில்லை என்பதையும் கூறத்தான் வேண்டியிருக்கிறது.

**அவ்வப்பொழுது கவிதைகளை எழுதி வருகின்ற நீங்கள் அவற்றை ஆவணப்படுத்த முன்வராமைக்கு ஏதுவான காரணங்கள் தான் என்ன ?**

இலக்கியத்துறையில் எனது வரவு 1980ல் கல்லூரியில் படிக்கும் காலத்திலிருந்தே ஆரம்பமான சுவாரசியமான ஒன்று.
புலோலியுரான் என அறிமுகமாகி பல கவிதைகளை, கட்டுரைகளை, வரைந்திருக்கிறேன். இலங்கை வானொலி, வீரகேசரி, சுதந்திரன், ஈழநாடு ஆகியவற்றில் வெளிவந்திருந்தது. இதற்கு, பத்திரிகையாளரகள் திருமதி இரத்தினம், ராஜசிங்கம், பல்கலைக்கழக ஆசான் நித்தி கனகரத்தினம், எஸ்.பொ ஆகியவர்கள் எனக்கு உறுதுணையாக இருந்த சிலர். புத்தகங்களாக வெளியிடுவதற்கு நேரமின்மைதான் மிகமுக்கிய காரணம். இந்த வருட இறுதியில் இதற்கான வேலையில் இறங்க திட்டமிட்டுள்ளேன். கவிதைகள் மாத்திரமல்ல, நிர்வாகம், பொருளாதாரம், அரசியல் சம்பந்தமான புத்தகங்கள் தமிழ், ஆங்கிலம் மற்றும் ஜேர்மன் மொழிகளில் வெளியிடவுள்ளேன்.

**தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்து பல வருடங்களை கடந்த நீங்கள் தாயகத்தின் ஒற்றையாட்சி அரசியல் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றீர்களா ?**

இல்லை! ஒற்றையாட்சி அரசியல் அமைப்பைக் கொண்டிருக்கிற இலங்கையில் எந்த உடன்பாட்டின்படி அதிகாரப் பகிர்வு செய்வது என்பது இயலாத காரியம். மேலும், மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் மிகவும் குறைவானது. இந்த உடன்பாடு தமிழ் மக்களின் நலனுக்கு எதிரானதும் நடைமுறைக்கு சாத்தியமற்றதும் ஆகும்.
தற்போது பௌத்த மதத்தை முன்னிறுத்தி ஒற்றையாட்சியை அடிப்படையாகக் கொண்ட அரசியலமைப்பு மீள வரையப்படுகின்றது. இலங்கையின் உள்ளகப் பிரச்சினைகளுக்கு ஒற்றையாட்சிக்குள் தீர்வு கண்டுவிட முடியும் என்கிற முனைப்பு, கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கின்ற போது எவ்வளவு அபத்தமானது என்பது வெளிப்படையாக புரியும். தமிழ் மக்களின் இறுதி ஆணை என்பது ஒருங்கிணைந்த இலங்கைக்குள் அதிகாரங்களைப் பங்கிட்டுக் கொள்வதற்கானது. அது, ஒற்றையாட்சி என்கிற விடயத்தை குறித்தானது அல்ல. இந்த நிலையை, தமிழ் மக்களின் நெகிழ்நிலை தரப்பாக தம்மை தொடர்ந்தும் முன்வைத்துக் கொண்டிருக்கும் இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிகார மையம் எவ்வாறு கையாளப் போகின்றது என்பது இதுவரையில் மிகப்பெரிய கேள்விக்குறி.

**முள்ளிப்பேரவலம் முடிவடைந்து 7 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் சமகாலத்தில் இருக்கும் அரசியல் தலைமைகளிடம் பேரம் பேசும் வலுவானது எப்படியாக இருக்கின்றது ?**

தமிழ் மக்களின் சார்பில் பேசும் சக்தியாக விளங்கிய
விடுதலைப் புலிகளுக்குப் பின்னர், அத்தகைய நிலையை தேர்தலின் மூலம் தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு கொடுத்தனர். இன்று தமிழ் மக்களின் அந்த ஆணை, கூட்டமைப்புக்குள் இருந்தே கொச்சைப்படுத்தப்படும், நிகழ்வுகளும் நடக்கின்றன. இப்போது உடைபட்டுப் போய்விடுமோ என்பது தான், அண்மைக்காலத்தில் தமிழ்மக்களிடம் தீவிரமாகத் தோன்றியிருக்கின்ற கவலை.
பாராளுமன்றத் தேர்தலுக்குப் பிந்திய அரசியல் சூழல் என்பது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பிரதான எதிர்க்கட்சி என்ற பலத்தைக் கொடுத்திருந்தாலும், அதன் பேரம் பேசும் வலுவை குறைத்திருப்பதாகவே கருத்து நிலவுன்றது.
தமிழர் தரப்பின் பேரம் பேசும் வலு பற்றிய கேள்வி எழுந்திருப்பதை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பலவீனமாகச் சித்திரிக்க முனைந்தாலும், இலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளும் (SLFP + UNP) இணைந்து ஆட்சியமைத்துக் கொண்டதுதான் இந்த நிலைக்குப் பிரதான காரணம். முன்னொருபோதும் நிகழ்ந்திராத இந்த அரசியல் அதிசயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின், பேரம் பேசும் வலுவை குறைத்து விட்டது. இதுதான் யதார்த்தம்.

**தமிழர் விடுதலைக் கூட்டணியின் பின்னர் தமிழர் தரப்பில் இருந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு தமிழ் ஈழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டதமிழர் தேசியக்கூட்டமைப்பானது தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை இன்றும் ஆதரித்து நிற்கின்றதா ?**

இல்லையென்றுதான் கூறவேண்டும். கடந்த வருடம் யாழ். தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில் தமிழர் தாயகக் கோட்பாட்டில், அதன் அடிப்படையில் உரிமையை வென்றெடுப்பதில் விட்டுக்கொடுப்புக்கோ வேறு வகையான இணக்கப்பாட்டுக்கோ இடமில்லை அரசியல் உரிமைப்போராட்டத்தை முன்னெடுப்பதற்கு தமிழ் மக்கள் ஒருமித்த உணர்வோடு வீட்டுச்சின்னத்துக்கு வாக்களிக்கவேண்டும். இது காலத்தின் கட்டாயம் என்பதைக் கருத்திற் கொண்டு செயற்படுவது அவசியமாகும் என்று கூறித்தான் வென்றார்கள், பாரளுமன்றம் சென்றார்கள். பின்னர் இவர்கள் இதயத்தால் இணைந்து வேறு ஒரு நிகழ்ச்சி நிரலில் நடந்து கொள்வது அண்மைக்காலமாக நாம் காணக்கூடியதாக இருக்கிறது. தமிழர்களின் தாயகக் கோட்ப்பாடு, என்ற சொல் இனிமேல் அடுத்த தேர்தலில்தான் இவர்கள் வாயிலிருந்து வரும்.

**மக்களால் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தில் மக்களுக்கான உரிமை குறித்து ஒருவர் பேசவேண்டும் என்பது உங்கள் பார்வையிலே எந்தவகையில்**

**ஆபத்தாக இருக்கின்றது ?**

தனி அதிகாரம் பற்றிய சமஷ்டி ஆட்சி அந்தஸ்து குறித்த தமிழ்மொழி பேசும் மக்களின் பொது அபிப்பிராயத்தை தெரிந்துகொள்ள வேண்டிய காரியபூர்வமான, தார்மீக முறையிலான கடப்பாட்டிலிருந்து வழுவி, மனித உரிமைகளை பாதுகாத்தல், ஊக்குவித்தல், அனுசரித்து நடந்து கொள்ளுதல் தொடர்பில் சர்வதேச ரீதியிலும், உள்நாட்டிலும் அதிகளவிலான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்ற போதிலும், சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட மனித உரிமை பற்றிய உலகப்பிரகடனங்கள் மீதான பாரிய மீறுகைகள், அடிப்படைச்சுதந்திரங்களுக்கான உலக மதிப்பை பரிசுத்தமாக மேம்படுத்தும் கடப்பாடுகளில் சிறீலங்கா அரசு தொடர்ச்சியாக தவறிழைத்தே வந்திருக்கின்றது/வருகின்றது.

சமகாலத்திலும் கூட, இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்துகொண்டு தான் இருக்கின்றன. சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டுள்ள பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற மக்கள், அச்சம்பவங்கள் தொடர்பில் வெளிஉலகுக்கு பகிரங்கப்படுத்த முனைகின்றனர்.

இவ்வளவு சிக்கலான, 60 வருடங்களுக்கு மேலான ஓர் இனத்தின் பிரச்சனைகளை தனி ஒருவர் கையாளுவதற்கு தமிழர் தரப்பில் தற்போது ஒருவரும் இல்லை. அப்படி இருந்தாலும் அதை பெரும்பான்மையினருடன் கையாள்வது முடியாத காரியம்.

இலங்கை, தமிழகம், புலம்பெயர் நாடுகளிலுள்ள பேராசிரியர்கள், சட்டவாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், படைப்பாளிகள், ஊடகவியலாளர்கள், அரசியல் மனித உரிமை செயல்பாட்டாளர்கள், கல்வியாளர்கள், புத்திஜீவிகள் பலரை மதி-உரைஞர் குழுமமாகக்கொண்டு, வடக்கு கிழக்கில் செயல்பாட்டு வலையமைப்பைக்கொண்டுள்ள, பல்கலைக்கழக உயர்கல்வி மாணவர்கள், சிவில் சமூக மனித உரிமை செயல்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள், முன்னாள் போராளிகள், சமூக ஆர்வலர்கள் உறுப்புரிமை பெறும், மாற்று அரசியலுக்கான உந்துசக்தி இயக்கமாக மாற்றி ஓர் பூரணமான கட்டமைப்பை உருவாக்கி அதனூடாக பயணிப்பதே ஆக்கபூர்வமானதாக அமையும்.

**இன்றுள்ள தாயக நிலவரங்களை எப்படி பார்க்கின்றீர்கள்?**

இதுவொரு சிக்கலான காலகட்டம். ஒருபுறம் மனிதாபிமானப் பிரச்சனைகள், மனிதவுரிமைச் சிக்கல்கள் என குறுங்கால பிரச்சனைகள். மறுபுறம், நீண்டகால விவகாரங்களாக எமது அரசியல், பாதுகாப்பு, இராணுவ ஆக்கிரமிப்பு, இடப்பெயர்வு, புலப்பெயர்வு என்பன காரணமாக மக்கள் பலவீனப்பட்டுப் போயுள்ளனர். எமது அடையாளம் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. போரில் பெற்ற வெற்றி சிங்கள அரசை பலப்படுத்தியிருக்கிறது. இத்தனை சிக்கல்களையும் எதிர்கொண்டு முன்னேறிச் செல்வதற்குத் தேவையான அர்ப்பணிப்பும், துணிச்சலுமுள்ள அரசியல் தலைமைத்துவம் தாயகத்தில் வெளிப்படவில்லை என்கின்ற ஆதங்கம் எனக்குள் நிறைய உண்டு.

**இப்படியான சிக்கல்களை தமிழ்சமூகம் எவ்வாறு எதிர்கொள்ளவேண்டும் என்று எண்ணுகின்றீர்கள் ?**

நீண்டகால திட்டத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயம். பிரகடனங்களும் வெற்றுத்தந்திரங்களும், உணர்ச்சிவயப்பட்ட பேச்சுக்களும் காலத்துக்கு ஒவ்வாத அறிக்கைகளும் இன்றைய நிலையிலிருந்து எமது இருப்பை மீட்டெடுக்காது. இவ்வாறான நீண்டகால திட்டத்திற்கு தேவையான அடிப்படைகளை நாங்கள் இப்போது அத்திவாரமாக இடுதல் வேண்டும். இதற்கான மூலமான தரப்பாய் இருப்பவர்கள் தாயகத்தில் வாழும் மக்கள்.

> *முள்ளிவாய்க்காலை வெற்றி கொள்ள கருணாவும், பிள்ளையானும் மட்டுமல்ல டக்ளசும், சங்கரியும், சம்பந்தனும் கருணாநிதியும் இன்னும் இன்னும் பலரும் துணை நின்றார்கள் என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும்.*

புலம்பெயர்ந்த தமிழ் சமூகம் தாயகத்தில் வாழும் மக்களை பலப்படுத்தும் அடுத்த வட்டம் என்றே நான் கணிப்பிடுகின்றேன். இந்த அடிப்படையில், முதலாவது, தாயகத்தில் வாழும் மக்களின் உடனடிப்பிரச்சனைகளை புறக்கணிக்காது, உணர்ந்து செயற்படல் வேண்டும். இரண்டாவது, சிறைப்பட்டுக் கிடக்கும் கைதிகளை பாதுகாத்து அவர்களை வெளியில் எடுத்துவிடும் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும். மூன்றாவது, தாயகத்தில் செயற்படும் அரசியல் சக்திகளிடையே ஒருங்கிணைப்பினையும், பொது வேலைத்திட்டத்தினையும் ஏற்படுத்தி எதிர்காலம் தொடர்பான நீண்டகாலப் பார்வை கொண்ட போராட்டப் பாதையை வகுக்க வேண்டும். நான் அரசியல் போராட்டத்தினைத்தான் முன்வைக்கின்றேன்.

**உங்கள் நீண்டகால புலம்பெயர் வாழ்வில் இருந்து, புலம்பெயர்ந்திருக்கின்ற தமிழர்களது சமூக ஒற்றுமை பற்றிய உங்கள் பார்வையானது எப்படியாக இருக்கின்றது ?**

இப்போது சிறிது காலமாக எம்மவர்கள் உச்சரிக்கும் வார்த்தை துரோகி என்பது..! எம்மினத்துக்கு ஆற்ற வேண்டிய பங்களிப்பை செய்யத் துணிந்தவர்களாக புலம்பெயர்ந்தவர்கள் தெரியவில்லை. புத்திசாலித்தனமாக பேசுவதாகச் சொல்லிக் கொண்டு துரோகங்களையும் துரோகிகளையும் புனிதர்களாக்கும் செயல்களை தான் இவர்கள் மேற்கொள்ளுகிறார்கள்.

சிங்கள அரசு அன்றும் இன்றும் என்றும் தமிழர்களை குறிப்பாக விடுதலை உரிமை வேண்டி நிற்கும் தமிழர்களை பயங்கரவாதிகளாக இனங்காண்பதில் இருந்து மாறுபடவே இல்லை. அவர்கள் அதில் உறுதியாக நின்று இறுதியில் உலகுக்கும் எம்மை பயங்கரவாதிகளாக சித்தரித்து எம்மைக் கொண்டே எம்மை அழித்தும் விட்டிருக்கிறார்கள்.

ஆனால் நாம் எதிரிக்கும் துரோகிக்கும் நண்பனுக்கும் வித்தியாசம் தெரியாமல் எல்லோரையும் ஒரே அளவு கோலால் அளவிட்டு இதயத்தால் இணைந்து இணக்க அரசியல் செய்வோம் எனக் கூறி ஒரே கூடாரத்தில் குந்த வைத்து பந்தி பரிமாறின் உரிமையும் சுதந்திரமும் கிடைத்துவிடும் என்றும் படம்காட்ட ஆரம்பித்துள்ளோம்.

ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள்.! பச்சோந்திகளையும், துரோகிகளையும், விலைபோனவர்களையும், மதில் மேல் பூனைகளையும் சரியாக இனங்காணாத வேளைகளில் எல்லாம் நாம் பலவீனப்பட்டிருக்கிறமே தவிர நாம் ஒற்றுமைப்படுத்தி வெல்ல முடியும் என்ற முயற்சிகளில் தோற்றதே அதிகம். அப்படி இருக்க, காலம் காலமாக பாடப்படும் பல்லவிகள், தேர்தல் கால கோசங்கள், முள்ளிவாய்க்காலின் பின் எமக்கு அவசியம் இல்லை. முள்ளிவாய்க்காலை வெற்றி கொள்ள கருணாவும், பிள்ளையானும் மட்டுமல்ல டக்ளசும், சங்கரியும், சம்பந்தனும் கருணாநிதியும் இன்னும் இன்னும் பலரும் துணை நின்றார்கள் என்பதில் நாம் தெளிவாக இருக்க வேண்டும்.

இன்று கூட ஒவ்வொரு தமிழ் அரசியல்வதியும் தன் அரசியல் வியாபாரத்தை எப்படி நடத்துவது என்று கவனிக்கிறானே தவிர தன் இனம், உரிமை, விடுதலை பற்றி எவனும் வாய் திறக்க தயாரில்லை! இவர்களை எல்லாம் ஒற்றுமைப்படுத்தி நீங்கள் அவர்களை தமிழினத்தின் தவப்புதல்வர்களாக்கலாம் என்று கனவு காண்கிறீர்கள். அது நிச்சயம் நடக்கப் போவதில்லை. ஏனெனில் எமக்கு தான் எதிரிக்கும் துரோகிக்கும் வித்தியாசம் தெரியாது! ஆனால் எதிரிகளும் துரோகிகளும் பச்சோந்திகளும் தமது நிலைகளில் தெளிவாகவே இருக்கிறார்கள்.

ஒரு இனத்துக்கு உறுதியோடு சேவை செய்ய முடியாதவர்களை அந்த இனத்தின் பிதாமகர்களாக காட்ட முனையும் கருத்துக்களையே நான் வன்மையாக வெறுக்கிறேன். இது கற்பனையில் பெருமை வளர்த்துத் திரியும் எமது இனத்துக்கு இன்னும் இன்னும் ஆபத்துக்களையே கொண்டு வந்து சேர்க்கும். இதை தெளிவாக உணர்ந்து அவரவருக்கு அந்தந்த வடிவில் நாம் திட்டம் வகுத்து செயற்பட்டால் அன்றி எம்மினத்தை யாராலும் காப்பாற்ற முடியாது.

முள்ளிவாய்க்கால் என்கின்ற பேரவலத்தினை தந்த சக்திகள் அதன் அடுத்த கட்டமாக புலத்துத் தமிழர்களை அடுத்த முள்ளிவாய்க்கால் நிலைக்குக் கொண்டு வந்துள்ளார்கள். புலத்தில் வாழும் தமிழ்மக்கள் தமது பங்களிப்புக்களை நிறைய வழங்கியவர்கள். நிறைந்த கனவுகளைக் கொண்டிருந்தவர்கள். மே18 வரையான இழப்புக்களால் அல்லது தோல்விகளால் துவண்டு, விரக்தியுற்று சோர்ந்து போயுள்ளனர். அவர்களை இன்னமும் துன்பப்படுத்தும் விதத்தில் இணையங்கள், ஊடகங்கள் என்கின்ற பெயரில் மக்கள் விரோத, சக்திகள் நடத்தும் மனோவியற்போரினை இந்த முள்ளிவாய்க்கால் இரண்டிற்கான மூல தந்திரமாக நான் பார்க்கின்றேன்.

**ஆனால் சமீபகாலமாக புதிது புதிதாகப் பல அதிரடிப் பூதங்கள் கிளம்பியிருக்கின்றனவே ?**

இந்தப்பூதங்கள் முள்ளிவாய்க்காலுக்கு முன்னமே புலமெங்கும் வந்தோஃதோன்றியோ விட்டன. நாம் நித்திரையில் இருந்து விட்டோம்!!! தங்களுக்குள் என்று ஒரு வட்டத்தை போட்டு ஒரு பாரிய அழிவிற்குப்பின்னரும் செயற்பாடுகள் எல்லாவற்றிலும் வெளிப்படைத்தனமையை கடைப்பிடிக்க தவறிய சந்தர்ப்பத்தை பாவித்து இப்பூதங்கள் கிளப்பப்பட்டு இருக்கின்றது!

**சினிமா தயாரிப்பு துறையில் இருக்கின்ற நீங்கள் ஈழத்தில் உருவாக்கி வருகின்ற குறுகிய ஃ நெடும் திரைப்படங்களை எவ்வாறு நோக்குகின்றீர்கள் ?**

இலங்கையைப் பொறுத்த வரையில் குறுகிய மற்றும் நெடும் திரைப்படங்கள் படைக்கப்பட்டிருந்தாலும் வணிக திரைப்படங்களுக்காக நாம் இன்னும் தமிழ் நாட்டையும், பாலிவுட்டையுமே நம்பிக் கொண்டிருக்கிறோம். இலங்கை திரைப்படத்துறை என்பது வணிக ரீதியில் தனித்துவம் இல்லாததாகவே இருக்கிறது. இலங்கை திரைப்படத்துறை பல திறமையாளர்களையும், படைப்பாளிகளையும் கொண்டிருந்தாலும், ஒரு சரியான இயக்கப் பாதை மட்டும், வணிக ரீதியான அங்கீகாரம் என்பது கிடைக்காமல் ஒரு குறுகிய வட்டத்துக்குள் அடைபட்டுக்கொண்டுள்ளது. வணிக ரீதியான அங்கீகாரமும், அதற்கு உண்டான வருமானமுமே எந்தவொரு விஷயத்தையும் அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல கூடிய ஒன்றாகும். இதனால் வளர்ச்சி பாதிப்படைந்து மேற்கொண்டு படைப்புகளைத் தொடர இயலாமல்போகிறது. இன்றைய சூழலின் இந்த பாதையை சரியான திசையை நோக்கி செலுத்துவதே நமது நோக்கமாகும். அந்தப் பொறுப்பை நாம்தான் கையில் எடுக்க வேண்டும். இதற்குண்டான அடிப்படையும் சில வசதிகளும் நமக்குத் தேவையாய் இருக்கின்றது. அதற்குண்டான சில திட்டங்களை நான் எனது திரைப்படத்துறை சார்ந்த நண்பர்களுடன் சேர்ந்து வகுத்துக் கொண்டிருக்கிறேன். சரியான காலமும் நேரமும் கைகூடி வரும்போது எனது கடமை ஒரு விதையாக இருந்து பின்வரும் படைப்பாளிகளுக்கு ஒரு வெற்றிப்பாதையாக உருவாக எமது இயக்கத்திலும், மேற்பார்வையிலும் வணிக ரீதியான அங்கீகாரத்துடன் இலங்கைத் திரைப்படத்துறையை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லவே.

**தமிழ் திரைப்படத்துறையில் தயாரிப்பாளராக இருந்திருக்கின்றீர்கள். அப்படி இருக்க வேண்டிய தேவையும் அதில் ஏற்பட்ட அனுபவங்களும் எப்படியாக இருந்தன ?**

உங்களது முந்தைய கேள்விக்கான எனது பதிலின் அடிப்படை தான் இந்த கேள்விக்கும் விடை. இலங்கையில் திரைப்படத்துறையை வணிக ரீதியாகவும் கலாசார வளர்ச்சியையும் வளர்க்க திட்டமிடுள்ளதாக எனது முந்தைய பதிலில் தெரிவித்திருந்தேன். அதற்கு எனக்கு சில பயிற்சியும் அடிப்படை விளக்கங்களும் தேவைப்பட்டன. அதன்காரணமாக நானே சில திரைப்படங்களை, குறும்படங்களை தயாரித்திருக்கிறேன். இயக்குனர் பாரதிராஜா, இயக்குனர் மகேந்திரன், இயக்குனர் சீமான், உதவி இயக்குனர் அஸானந், இயக்குனர் ஊ.பாலச்சந்தர் தாயாரிப்பாளர் சாயி மீரா, நடிகர் சூரியா, நடிகர் கலையரசன், இயக்குனர் மஞ்சு பாஸ்கர் ஆகியோரினது நட்பும் என்னை வளர்த்திருக்கிறது. அவர்கள் தம் அனுபவம் எனக்கு இன்னும் பயனுள்ளதாக இருந்தது. நான் தயாரித்திருந்த கால கட்டத்தில் தமிழ் சினிமா ஒரு முக்கியமான தொழில் நுட்ப மாறுதலை நோக்கி சென்று கொண்டிருந்தது. டிஜிடல் (Digital) முறை அறிமுகமானது. அதனால் திரையில் காண்பிக்கப்படும் ஒலி, ஒளி முறைகள், மற்றும் போஸ்ட் ப்ரொடக்ஷன் (Post Production) முறைகளில் தொழில்நுட்ப முன்னேற்றம், இவைகளினால் திரைப்படம் தயாரிப்பு

செலவில் பொருட்செலவை ஏராளமாக குறைப்பு என்பதே நான் கண்ட அனுபவங்களில் சில. மற்றும் திரைப்படத்துறையில் திரைப்பட தயாரிப்பு மட்டுமல்லாமல் மற்றும் பல துறைகள் உள்ளன என்பதும் நான் கண்ட அனுபவத்தில் சில. கடந்த சில வருடங்களாக அதற்கும் நான் செய்தி சேகரித்தேன். திரைப்படத்துறையின் எல்லா அம்சங்களையும் உள்ளடக்கி எல்லாவற்றையும் ஒருங்கிணைந்த ஒரு பன்னாட்டு கூட்டு நிறுவனம் ஒன்றை, தமிழகத்தை அடிப்படையாக கொண்டு உலக நாடுகள் அனைத்திலும் செயல்படும் விதமாக ஜேர்மன் தொழில் நுட்பத்துடன் உருவாக்கும் அடிப்படை ஆயத்தங்களை நான் தற்போது மேற்கொண்டுள்ளேன். அதற்கான அறிவிப்புகள் விரைவில் வெளிவரும். சீக்கிரம் இதுபற்றி நிச்சயம் இன்னுமோர் சந்தர்ப்பத்தில் விபரமாக நாம் கலந்தாலோசிக்கலாம் என எண்ணுகிறேன்.

**சர்வதேச ரீதியாக கடல்நீரை நன்னீராக்கும் பொறிமுறையில் உங்கள் பங்களிப்பு எப்படியாக இருந்தது ?**

இன்றைக்கு சர்வதேச உலகம் சந்தித்துக் கொண்டிருக்கும் மிக முக்கியமான பிரச்சனைகளுள் மிக முக்கியமாக இருப்பது சுகாதாரமான குடி நீர் வழங்கும் திட்டம் தான். மூன்றாம் உலகப்போரே குடிநீரை அடிப்படையாக வைத்துத்தான் உருவாகும் என்று சொல்கின்ற அளவிற்கு இன்றைக்கு குடி நீர் ஒரு பெரிய பிரச்சனையாக, சவாலாக நம்முன்னே உள்ளது. இயற்கை சீற்றத்தின் காரணமாகவும் பருவமழை பொய்த்ததின் காரணமாகவும் மற்றும் நிலத்தடி நீர் பல்வேறு பயன்பாடுகளுக்காக உறிஞ்சப்படுவதும் குடிநீர் பஞ்சம் ஏற்பட ஒரு முக்கிய காரணமாக அமைகின்றது. இந்த சூழலில் தான் கடல் நீரை நன்னீராக்கும் பொறிமுறை முன்னிலைப்படுத்தப்படுகிறது. உலகின் மொத்த நிலப்பரப்பில் மூன்று பங்காக இருக்கக்கூடிய கடல்நீரை பயன்படுத்தி குடிநீராக தேவைப்படும் அளவிற்கு எடுத்துக் கொள்வதின் மூலமாக குடி நீர் பற்றாக்குறை நிச்சயமாகத் தீரும். இன்றைக்கு உலகில் குடிநீர் எடுப்பதற்கு வழியில்லாத பல்வேறு வளைகுடா நாடுகளில் இந்த திட்டம் இன்றும் வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. மேலும் மேற்கத்திய, ஆப்பிரிக்க நாடுகள் பலவும் இப்போது இந்த முறையை பின்பற்ற தொடங்கியுள்ளன. ஆசிய நாடுகளும் முயற்சியில் இறங்கி இந்த திட்டத்தை செயல்படுத்தும் விதமாக முன்னோக்கி சென்றுகொண்டுள்ளன. இயற்கையின் வரப்பிரசாதமாக இருக்கக்கூடிய கடலின் இயற்கைத்தன்மை சற்றும் மாசுபடாமல் இந்த திட்டத்தை செயல்படுத்துவது ஓர் கட்டாய விதியாகும். அந்த அடிப்படையில் பல்வேறு விதமான விஞ்ஞான பூர்வ கண்டு பிடிப்பு முறைகள் இன்றைக்கு வந்து விட்டன. இவை கடலின் தன்மையையும் மனித உடலின் தன்மையையும் எவ்வகையிலும் பாதிக்காமல் சிறந்த நன்னீரை இந்த உலகிற்கு கொடுக்க முடியும். இந்த நுட்பங்களை பயன்படுத்தி இந்த திட்டத்தை செயல்படுத்திய பல்வேறு நாடுகளில் ஆலோசனை அமைப்பில் நான் பங்கு கொண்டு செயலாற்றியது எனக்கு கிடைத்த பெருமையாகவே நான் கருதுகின்றேன். மிக முக்கியமாக கானா, லிபியா, துனேசியா, எகிப்து, சூடான், துபாய் ஆகிய நாடுகளில் ஜேர்மன் மற்றும் இஸ்ரேல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இத்திட்டங்களை நடைமுறைப்படுத்திய அனுபவம் நிறைய உண்டு. இதில் எனக்கு ஏற்பட்ட அனுபவம் இந்த துறையைப் பற்றி முழுமையாக தெரிந்து கொள்ளவும், எதிர்கால சந்ததிக்கு சுத்தமாக சுகாதாரமான நன்னீரை கடல் நீரிலிருந்து மாற்றிக் கொடுக்க முடியும் என்ற தெளிவை ஏற்படுத்தியிருக்கிறது.

**ஈழத்திலே கடல் நீரை நன்னீராக்கும் பொறிமுறையானது உங்கள் பார்வையிலே எப்படியாக இருக்கின்றது ?**

அடிப்படை ஆய்வுகள் நடத்தப்பெற்று சிறந்த தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்படாமல் இருப்பது வேதனையாக இருக்கிறது. இன்னும் நிறைய அடிப்படை கட்டமைப்புகள், ஆய்வு நிலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தரமும், சுகாதாரமும் 100 சதவீதம் உறுதிப் படுத்தப் படவேண்டும். வடமாகாணத்திலுள்ள சில அரசியல்வாதிகள் வணிக ரீதியான சிந்தனைகளை தள்ளி வைத்துவிட்டு மக்களின் வாழ்வாதாரத்தை மையமாகக் கொண்டு இந்தத்திட்டங்கள் செயல்படுத்தவேண்டும் என்பதே எனது விருப்பம். ஒரு சமூக பொருளாதார மேம்பாட்டினை எட்டுவதற்கு அடிப்படையில் சிறந்த மருத்துவமும் சுகாதாரமான நீரும் உறுதி செய்யப்படுதல் வேண்டும். இதை ஆட்சியாளர்களும், சமூக அமைப்புகளும் கவனத்தில் கொள்வது சிறந்தது.

**கடல் நீரை நன்னீராக்கும் பொறிமுறையால் கடலில் இருக்கின்ற உப்பின் விகிதங்கள் மாறுதல் அடைவதால் கடல்வாழ் உயிரினங்கள் அழிந்துவிடுகின்ற நிலை ஏற்படும் என்ற கடுமையான குற்றச்சாட்டு வடமாராட்சி கிழக்கு மீனவர்களால் வைக்கப்பட்டது குறித்து என்ன சொல்கின்றீர்கள் ?**

உப்பின் விகிதங்கள் மாறுதல் என்பது ஒரு முட்டாள்தனமான கருத்து. நான் மேலே சொன்ன கருத்துக்களில் இந்தக் கேள்விக்கான விடை மறைந்திருப்பதை நீங்கள் உணரலாம்.
இங்கே வைக்கப்படுகிற குற்றச்சாட்டு உண்மையாக இருக்கும் பட்சத்தில் சமூக பொறுப்புணர்வோடு அதை சம்பந்தப்பட்டவர்கள் அணுகுதல் வேண்டும். நான் ஏற்கெனவே குறிப்பிட்டது போல விஞ்ஞான பூர்வமான அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கடல்நீர் மாசுபடாத தொழில்நுட்பம் கண்டெடுக்கப்பட்டு அந்தப் பிரதேசத்தில் சுற்றுப்புற சூழல் எவ்வகையிலும் பாதிக்கப்படாமல் உறுதி செய்யப்படுதல் வேண்டும்.
நான் குறிப்பிட்டது போல மனசாட்சியோடு சமூக நலன் கலந்த அக்கறையோடு எவ்விதமான சுயலாபத்திற்கும் ஆசைப்படாமல் உகந்த தொழில் நுட்பத்தை செயல் படுத்துவதால் இது போன்ற பிரச்சனை எழ வாய்ப்பில்லை.
கடல்நீரில் இருந்து நன்னீர், மனிதஇனம் ஆரம்பத்திலிருந்து நடைமுறையில் இருக்கும் முறை. தற்போது விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் வளர்ந்துவிட்டது. செறிவு கூடிய உப்புநீரை திரும்ப கடலுக்குள் கலக்க வேண்டிய அவசியம் இல்லை, அதிலிருந்து நாம் நன்னீர் மாத்திரமல்ல உப்பையும் மின்சாரத்தையும் பெறக்கூடிய அளவுக்கு தொழில்நுட்பம் வளர்ந்துவிட்டது.

> யாழ் குடா நாட்டில் மட்டுமல்லாது இலங்கையில் விவசாய நடவடிக்கைகளை அதிகமாக மேற்கொள்ளப்படும் பல்வேறு பிரதேசங்களிலும் உள்ள நிலத்தடி நீர் நைற்றேற்றினால் மாசுபடுத்தப்பட்டுள்ளமை பல ஆய்வுகளின் மூலம் நிரூபணமாகியுள்ளது.

எனவே உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் மறு ஆய்வுகள் செய்தல் வேண்டும். தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உறுதி செய்தல் வேண்டும்.

**ஈழத்தின் வடபுலமான யாழ். குடாநாடு கடலால் கழுவிச் செல்லப்படக்கூடிய வாய்ப்பு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி உங்கள் பார்வை எப்படியாக இருக்கின்றது ?**

உலக வெப்பமயமாதல் பிரச்சனை காரணமாக அது சம்மந்தமாக நடத்தப்பட்ட ஆய்வுகளின் முடிவில் இந்த கருத்து தெரிவிக்கப்பட்டது உண்மைதான். ஆனால் இதுவரையில் எவ்விதமான முனைப்பும் இதுகுறித்து ஆட்சியாளர்களால் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பது மிகுந்த வேதனைக்குரியது. இந்த பகுதிகள் கடல் நீரால் சூழக்கூடிய அபாயம் அறிவிக்கப்பட்டுள்ள காரணத்தினால் மிகுந்த கவனத்தோடு இதைத் தடுப்பதற்குண்டான
அறிவியல் பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டியது காலத்தின் கட்டாயம். இது தொடர்பாக சர்வதேச சமூகத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி வெப்பமயமாதல் தருணத்தை குறைக்கப் பாடுபட்டு கொண்டிருக்கிற அமைப்புகளோடு கலந்தாய்வு செய்து இந்த துறை சம்பந்தப்பட்ட அனைத்து நிபுணர்களோடு இந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பது அவசியம். அதை இனியும் காலம் தாழ்த்தாமல் செய்யவேண்டிய கடமை சம்பந்தப்பட்டவர்களுக்கு உண்டு.

**ஈழத்தின் வடபுலமான யாழ்ப்பாண மாவட்டம் அண்மைக்காலமாக புற்றுநோய் மரணங்களில் முதலிடம் பெற்றுள்ளதை அவதானிக்க முடிகின்றது .இதற்கு ஏதுவான காரணிகள்தான் என்ன ?**

இன்று யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரை அதிகரித்து வரும் மக்கள் சனத்தொகையால் நிலத்தடி நீருக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள நிலையில் நிலத்தடி நீரின் மாசாக்கம் பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. சுன்னாகம் பகுதியில் உள்ள நிலத்தடி நீரில் கழிவு எண்ணெய் கலந்து இருப்பது எல்லோரும் அறிந்த விடயம். ஆனால் அதை விட யாழ் மாவட்டம் முழுவதும் உள்ள நிலத்தடி நீரை மாசுபடுத்திக் கொண்டிருக்கும் இன்னொரு மாசாக்கி நைற்றேற் எனப்படும் ஓர் இரசாயனப் பதார்த்தம். யாழ் குடா நாட்டில் மட்டுமல்லாது இலங்கையில் விவசாய நடவடிக்கைகளை அதிகமாக மேற்கொள்ளப்படும் பல்வேறு பிரதேசங்களிலும் உள்ள நிலத்தடி நீர் நைற்றேற்றினால் மாசுபடுத்தப்பட்டுள்ளமை பல ஆய்வுகளின் மூலம் நிரூபணமாகியுள்ளது.
இந்த நைற்றேற் மாசாக்கத்தின் பிரதான காரணமாக
விவசாய நடவடிக்கைகள் விளங்குகின்றன. விவசாயத்தின் போது பயன்படுத்தப்படும் சேதன, அசேதன பசளைகள், பூச்சிக் கொல்லிகள் மற்றும் களைநாசினிகளே நைற்றேற்றின் பிரதான மூலகங்களாகும்.

விவசாயிகளால் மிக அதிகளவில் சேதன அசேதனப் பசளைகள் பயன்படுத்தப்படுவதுடன் அண்மைக் காலமாக பூச்சி கொல்லிகள் மற்றும் களை நாசினிகளின் பாவனையும் அதிகரித்துள்ளது. இதனால் மிக அதிகளவான நைற்றேற் மண்ணுடனும் கிணற்று நீருடனும் கலக்கப்படுகிறது. விவசாயிகளால் இடப்படும் சேதன அசேதனப் பசளைகளில் ஒரு பகுதி மட்டுமே பயிர்களினால் அகத்துறுஞ்சப்படுகிறது. ஏனையவை மண்ணுடன் சேர்ந்து மண்ணினூடாக நிலத்தடி நீரைச் சென்றடைகின்றது.
யாழ்ப்பாணத்தில் விவசாயத்துக்காக நிலத்தடி நீரே பயன்படுத்தப்படுகிறது. நிலத்தடி நீரோனது நீர்ப்பம்பிகள் மூலம் பயிர்களுக்குத் தேவைப்படும் நீரை விட மிக அதிகளவிலான நீர் இறைக்கப்படுகிறது. இதனால் நிலத்தடி நீர் வீணாக்கப்படுவதுடன் இந்த நீரினூடாக நைற்றேற்றுக்கள் கரைந்து நிலத்தடி நீரைச் சென்றடைவதற்கும் வாய்ப்பு ஏற்படுகின்றது. நைற்றேற் மாசாக்கத்தின் மற்றுமொரு முக்கிய காரணியாக சேதனப் பசளைகளைத் தேக்கி வைக்கும் இடங்கள் விளங்குகின்றன. இந்தச் சேதனப் பசளைகளில் தாவர மற்றும் விலகுக் கழிவுகள் அடங்குகின்றன.
இவற்றில் ஏராளமான நைற்றேற்றைக் கொண்ட பதார்த்தங்கள் காணப்படுவதுடன் அவை நிலத்தடி நீரில் நைற்றேற் சேர்வதற்கு முக்கிய பங்கு வகிக்கின்றன. இவ்வாறான
காரணிகளால் யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீரில் நைற்றேற்றின் செறிவு அதிகரித்துச் செல்கிறது. உலக சுகாதார
நிறுவனம் பாதுகாப்பான குடிதண்ணீரில் நைற்றேற்றின் செறிவு 10mg/L intrate அல்லது 45 mg/L NO3 ஐ விட குறைவாக இருக்க வேண்டும் என வரையறை செய்துள்ளது. ஆனால் யாழ்ப்பாணத்தில் பல்வேறு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட நைற்றேற் மாசாக்கம் தொடர்பான ஆய்வுகளின் படி நிலத்தடி நீரின் நைற்றேற் நைதரசனின்; NO3 N2 செறிவு 10mg/L ஐ விட அதிகமாக இருப்பதாகவும் அந்த நீர் குடிதண்ணீராகப் பயன்படுத்தப்பட முடியாது எனவும் தெரிய வந்துள்ளது. இதனால் யாழ்ப்பாணத்தில் குடி தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.
நைற்றேற்றினால் மாசாக்கப்பட்ட நீரை அருந்துவதால் பல ஆபத்தான நோய் நிலைமைகள் ஏற்படுகின்றன. இவற்றுள் ஒன்று மெத்கீமொ குளோபினீமியா(Methaemo globine-mio) எனப்படும் நோய் நிலைமை. நைற்றைற் ஆனது உடலினுட் சென்று நைற்றைற் ஆக மாற்றம் அடைகிறது. இந்த நைற்றைற் ஆனது குருதியிலுள்ள ஒட்சிசனைக் காவிச் செல்லும்கிமோகுளோபின் எனும் பதார்த்தத்தை மெத்கீமோ குளோபினாக மாற்றமடையச் செய்வதனால் ஒட்சிசனை எடுத்துச் செல்லும் தன்மையை இழக்கச் செய்கின்றது. இதனால் குருதியினால் ஒட்சிசன் கொண்டு செல்லப்படுவது குறை-வடைகிறது. இதனால் கை, கால், நாக்கு என்பன நீலமாக மாறுவதுடன்(Cyanosis) மூச்சுத் திணறல் ஏற்பட்டு சிகிச்சை அளிக்கப்படாத விடத்து இறப்பும் நிகழலாம். இந்த நோயி-னால் பெரியவர்களை விடச் சிறு குழந்தைகளே அதிகமாகப்

பாதிக்கப்படுகின்றனர். ஏனெனில் அவர்களது முதிர்ச்சியடையாத உணவுக் கால்வாய்த்
தொகுதி நைற்றேற் ஆனது றைற்றைற்றாக மாறுவதை இலகுவாக அனுமதிக்கிறது. இதனால் இந்த நோயானது Blue baby synchome என அழைக்கப்படுகின்றது. இரைப்பை மற்றும் உணவுக் கால்வாய்த் தொகுதியில் ஏற்படும் புற்றுநோய், உயர் குருதி அமுக்கம் என்பன ஏனைய நோய்
நிலைமைகளாகும். புற்று நோயை உருவாக்கும் பல்வேறு காரணிகளில் நைற்றேற்றும் ஒரு முக்கிய காரணியாக கருதப்படுகின்றது. வடக்கு கிழக்கு போரினால் பாதிக்கப்பட்ட இடம். உலகிலே தடைசெய்யப்பட்ட ஆயுதங்கள் இரசாயனப்பொருட்கள் இந்த இடங்களில் மிகபெரும் அளவில் பாவிக்கப்பட்டுஅழிவுகளை சந்தித்ததன் மூலம் வாழ்வதற்கே உரிய இடமல்ல. மண்ணிலும், நீரிலும் சேர்ந்த இரசாயனங்களின் காரணமாக பல்வேறு தீங்குகள் ஏற்பட்டுள்ளன. அப்படியான இடத்தில் விளையும் பொருட்களிலிருந்து தயாரிக்கும் உணவுகளை உண்பதால், நீரை அருந்துவதால் ஏற்படும் விளைவுகளை ஒருதடவை கற்பனை செய்து பாருங்கள். காரணம் இப்போது புரியும்.

**நீங்கள் " யோகீசன் அறக்கட்டளை " என்ற ஓர் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தை நடாத்தி வருகின்றீர்கள் அது உருவாக வேண்டிய காரணமும் அதில் உங்கள் அனுபவமும் எப்படியாக இருந்தது ?**

என்னைப் பொறுத்த வரையில் மனிதவாழ்வு மூன்று தளங்களைக் கொண்டது.

1. அர்த்தப்படுத்திக் கொள்ளுதல்.
2. பிறர் துயர் துடைத்தல்.
3. சமூகநலன் பேணி சமுதாயத்தை வளர்த்தல், நிலை நிறுத்துதல்.

மேற்கண்ட அடிப்படையில் நான் வாழ்க்கையைப் பார்ப்பதால் இந்த சிந்தனைகளை செயலாக்கம் செய்வதில் எனக்குள் ஏற்பட்ட உந்துதல் இந்த தன்னார்வ தொண்டு நிறுவனத்தை துவங்க செய்தது. இதனுடைய தலையாய நோக்கம் சமூக பொருளாதாரத்தை பரவலாக மேம்படுத்தச் செய்வதும், ஒவ்வொருவரும் மற்றவர்களில் தங்கியிராத பொருளாதார தன்னிறைவை காண்பதும்தான். இனம், மதம், சாதி, நிறம் இன்னும் பிற வேறுபாடுகளை கடந்து இயன்ற உதவிகளை என் சார்ந்த சமூகத்திற்கு செய்ய நான் விழைகிறேன். அதனுடைய தொடக்கமாக இது 1996ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்றைக்கு, கல்வி, மருத்துவம் இன்னும் பிற சமூகதளங்களில் பல
பயனாளிகளை உருவாக்கி வருகிறது. இந்த பயணத்தை தொடர்வதில் எனக்கு மகிழ்ச்சியும் மனநிறைவும் உண்டு.
அறக்கட்டளையின் நிறைவேற்றிய பல செயல்பாடுகள் பற்றி நான் கூறமுடியும். எமது திட்டங்கள் எல்லோரும் செய்வது போன்று இல்லாமல் நீண்ட வாழ்வாதாரத்தை கொடுக்கக்கூடிய திட்டங்கள் வழிமுறைகளை இனங்கண்டு அதற்கு செயல்வடிவம் கொடுப்பது முக்கியமானது. அதில் ஒன்றுதான் கடந்தவருடம், ஒரு அரச சார்ற்ற நிறுவனத்திற்கூடாக கிழக்கு மாகாணத்தில் 400 பேரை தெரிவுசெய்து அவர்களுக்கு ஒருவருடத்துக்கு மேலாக சமூக கிராமிய நகர்ப்புற வளர்ச்சி சம்பந்தமான
துறைசார் உயர்கல்வியை வழங்கி அவர்கள் இந்த படிப்பின் பின்னர் 5- 10 பேரை உள்வாங்கி அவர்களை பயிற்றுவிப்பதும் வேலைத்திட்டங்களையும், செயல்திட்டங்களையும் செய்வார்கள். இத்திட்டத்தின் முழுச்செலவுடன் படிப்பவர்களுக்கான அனைத்து செலவுகளையும் அறக்கட்டளை பொறுப்பேற்றுள்ளது.
சமூகம் எனக்கு என்ன தந்தது என்பதை விட நான் என்ன சமூகத்திற்கு கொடுத்தேன் என்பதை சிந்திக்கவே நான் விரும்புகின்றேன்.

**ஓர் பயிற்சி விமான ஓட்டியாக இருக்கின்ற உங்களுக்கு இந்த துறையில் எப்படியாக ஓர் ஈர்ப்பு உருவாகியது ?**

சிறுவயதிலிருந்தே விமானமோட்டியாக வேண்டும் என்ற மிகப்பெரிய ஒரு கனவு இருந்தது. எனது தாயார் இலங்கையில் முதல் பெண் விமானியாக (Air Ceylon) இருந்தவர். அதன்பின் எனது தகப்பனார் வழி உறவினர்கள் இருவர் அமெரிக்கவிலும் இங்கிலாந்திலும் விமானியாக இருந்தவர்கள். எனது மாமனார் ஊயிவ. ஆனந்தப்பா இலங்கை விமானப்படைத் தளபதியாக இருந்து தொழில் அதிபர் உப்பாலி விஜயவர்த்தனாவுடன் விமானத்தோடு 13.02.1983 அன்று மலேசியாவிலிருந்து இலங்கை வரும்வழியில் காணாமல் போயினர். அதன்பின் எனது தந்தை இதற்கு இடமளிக்கவில்லை. பின்னர் ஜேர்மன் வந்த பிறகு ஆர்வக்கோளாறில் பொழுதுபோக்கிற்காக தொடங்கி தனியார் விமானப் பயிற்சி (PPL)கருவி செயல் அறுதிப்பாடு (Instrument Rating) இயந்திரப்பயிற்சி (Multiengine Training) முடித்த நிலையில் கிடைக்கும் நேரத்தில் கெலிகொப்டர் (PHPL) பயிற்சியையும் மேற்கொள்கின்றேன்.

**புலோலியூரானின் அரசியல்தான் என்ன ?**

a) "பொறுக்கி அரசியலில் பொதிசுமப்பதை விட களத்தில் புழுதியாக இருப்பதே மேல்." என்று நினைக்கிறேன்.
b) புலோலியூரான் அரசியல்வாதியோ,
பிரமுகரோ இல்லை. முழுமையான சமூக நலன் நோக்கிய இலக்கியவாதி, ஒரு முதலீட்டாளன் என்ற முகமும் உண்டு. மனிதாபிமானம்தான் எனது இயங்குதிசை. அந்த நிலைப்பாடு என்னிடமிருப்பதனால்தான் புலம்பெயர்ந்த பின்பும்
போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவும் பணிகளில் பலருடன் இணைந்திருக்கின்றேன். எனது செயற்பாடுகளும் மனிதாபிமானம் சார்ந்ததுதான். சுருக்கிச்சொல்வதெனில் மானிட நேயம்தான் எனது அரசியல்.
c) எனக்கு மட்டும் அந்த மண்ணில் நாளை பல முதலீடு, அபிவிருத்தி, தொழிற்சாலைகளை நிறுவும் சக்தியினை எனக்குத் தந்தால், குடிசைகளில் வாழும் இதே மக்களை நான் மீண்டும் பொருளாதார தன்னிறைவு, புதிய தொழில் நுட்பம், வேலை வாய்ப்பு, கல்வி, நிறைவான சுகாதாரம் மீண்டும் சந்தோசமாகவே வாழும் ஒரு வசதியினை ஏற்படுத்திக்கொடுத்து, அவர்களை மீண்டுமொரு தடவை தம் பஞ்சு மெத்தையில் உறங்கவைத்து அழகுபார்ப்பேன். இதற்காகவே என் இறுதி வாழ்க்கை அமைய ஆசைப்படுகின்றேன். இதற்கு என்னைச்சுற்றியுள்ள நண்பர்கள் நிச்சயம் உறுதுணையாக இருப்பார்கள் என நம்புகிறேன்.

# சுதந்திரத்துடன்

மனிதன் என்றாலே
ஆணைத்தான் குறிக்கிறது
மனிதி என்ற தனிப்பதம்
தமிழில் இல்லை
தான் ஒரு மனிதப்பிறவி என்று
உணரச் செய்யாத .வகையில் அவள் மீது
மரபுகள் திணிக்கப்பட்டன
மனித சமுதாயம்
விலங்கு நிலையில்
காடுகளில் வேட்டையாடிய
போது பெண்ணே
குடும்பத்தின் தலைமை
பின் சேமித்த உணவை
பயன்படுத்திக்கொள்ள
ஆணே தலைமை வகித்தான்
படிப்படியாக அவள்
ஊழியம் செய்யும்
பாவையாக பதுமையாக
இன்பம் தரும் பொருளாக
வாரிசு தரும் கருவியாக
அசையா உடைமைபோல்
அசையும் உடமையானாள
மண் கூட தனக்கு
ஒவ்வாத குப்பைகளை
சீரணம் செய்வதில்லை
பெண் எல்லாவற்றையும்
சீரணம் செய்தாள
இந்த ஒடுக்குதல்
பண்பாடு எனும்
ஒழுக்கத்தில்
பொதியப்பட்டது
பெண் என்ற பிரக்ஞை
உறைந்து கிடக்கும் சோகம்
ஏட்டையும் பெண்கள்
தொடுவது தீமை
என்று எண்ணியிருந்தவரை
புரட்டிப்போடனர்
தமிழீழப் பெண்கள்
விடுதலைக்காற்றை சுவாசிக்கத்
தொடங்கினோம்
கட்டுக்கள் தகர்த்து
சமத்துவம் படைத்தோம்
சுற்றியிருந்த சுவர்ச் சிறை
உடைந்தது
சுதந்திர வாழ்வின் வலிமைகளை
அனுபவித்தோம்
சகமனிதர் என்ற
பார்வை சமுதாயத்தில்
ஏற்பட்டது
விரிந்த வானில்
விடுதைலைப் பறவையாக
சிறகுகள் விரித்த பொழுது
கிழே தெரிந்த நிலம்
சுதந்திரத்துடன்

பாமினி ஜெசியந்தன்
ஜெர்மனி

# நாலாம் மாடி

பகுதி - 2 உண்மைத் தொடர்.....



சிவரதன்

> என்னை உள்ளே விட போகும் அந்த சிறை அறைகளை பார்த்தேன் .
> ஒவ்வொரு அறையில் உள்ளேயும் பலர் இருந்தார்கள் ஒரு அறைக்குள் இவ்வளவு பேரா ? என்று யோசிச்சேன் . அவர்கள் எல்லோருமே என்னையே பார்த்து கொண்டிருந்தார்கள் ..
>
> இனி.........

அவர்களுக்கு விடுப்பு கேட்க ஆள் வந்த சந்தோசம் என்று பிறகு தான் எனக்கு புரிந்தது சம்பந்தமே இல்லாத பிரச்சனை ஒன்றுக்காக நான் உள்ளே வந்திருக்கிறேன் ..இதுவரை எனக்கு புரியல எங்கே பிழை விட்டேன் என்று இருந்தாலும் ஒன்றை நம்பினேன் .

இவன்ங்க ஆள் மாறி பிடிச்சிட்டாங்க இல்லை என்றால் எனக்கு அடிச்சு பின்னி இருப்பாங்க ..இவங்க என்னவோ சந்தேகப்படுறாங்க அதை கிளியர் பண்ணினால் சரி ,,இரண்டு மூன்று நாளைக்குள் விட்டுடுவாங்க என்று நினைத்து கொண்டிருக்கும் போதே ஜேதிலக மே கட்டி அத்துலட்ட தாண்ட என்று சொன்னான் என்னை பதிந்து கொண்டிருந்தவன் .

ஜெதிலக என்ற PC வந்து என்னை வர சொன்னான் .. நான் போனேன்

இதுவரை சினிமாவில மட்டுமே பார்த்த அந்த சிறை கதவுகளை நோக்கி இதுவரை காலமும் அனுபவித்திராத அந்த வாழ்கையை அது அப்படி தான் இருக்கும் என்ற கற்பனை கூட பண்ணிராத வாழ்கையை நோக்கி போய் கொண்டிருக்கிறேன் .

அவர்களும் ஆவலுடன் காத்திருக்கிறார்கள் எந்த அறைக்குள் விட போகிறார்கள் என்னை என்று என்னை சரியாக நடு அறையை நோக்கி கொண்டு சென்றனர் ,

**பலர் சரம் கட்டி இருந்தார்கள் சிலர் ஷர்ட் போட்டு இருந்தார்கள் ,,சிலர் வெறும் மேலோடு இருந்தார்கள் ஏன் வெறும் மேலோடு இருந்தார்கள் என்பது உள்ளே வந்து 10 நிமிஷத்தில் எனக்கு புரிய ஆரம்பித்தது.**

தன்னிடமே வைத்திருந்த திறப்பை போட்டு திறந்தான் அந்த கதவை .கண்களில் கண்ணீருடன் அவர்கள் இருந்த அந்த அறைக்குள் நுழைக்றேன்.
கிரீச் ,
கதவு பூட்டப்படுகிறது ,

இதுவரை பார்த்திராத ,கற்பனையில் கூட பார்த்திராத .
சினிமாவில் கூட காட்டியிராத அந்த சிறை அறைக்குள் நான் இருந்தேன் எனது கண்கள் கலங்கி இருந்தன எந்த நேரமும் அழ கூடிய நிலையில் நான் இருந்ததை அங்கே இருந்தவர்கள் உணர்ந்திருக்க வேண்டும் என்றே நினைத்தேன் அவர்கள் எதுவுமே என்னிடம் கேட்கவில்லை ..ஏற்கனவே அங்கே இருந்த சாப்பாட்டு பார்சல் ஒன்றை எனக்கு தந்து சாப்பிட சொன்னார்கள் . நேரம் மதியம் தாண்டி மாலையை நெருங்கி கொண்டிருந்திருக்க வேண்டும் ..எவரிடமும் மணிக்கூடு இல்லை ,,ஆயினும் நான் உள்ளே வந்த நேரத்தையும் விசாரித்த பின் இங்கு கொண்டு வந்து விட்ட நேரத்தையும் வைத்து கணிப்பிட்டு கொண்டேன் ..

பசித்தது ,ஆனாலும் மனம் சிறை அறையில் நான் இருப்பதை ஜீரணித்து கொண்டிருந்ததது ,அத்தான் வீட்ட போய் சொன்ன வுடன் அம்மா அழுதிருப்பா ,அக்கா சாப்பிட்டிருக்க மாட்டா .தம்பி தங்கை எப்படி எடுத்து கொள்வார்கள் என்று மனம் வீட்டை சுற்றி வந்து கொண்டிருந்தது .

“சாப்பிடுங்க” என்று அதில சற்று குண்டாக இருந்தவன் ஒருத்தன் சொன்னான் .அப்போ தான் அவர்களை நிமர்ந்து பார்த்தேன் எல்லோர் முகத்திலும் தகவல் அறிய வேண்டும் என்ற ஆவல் இருந்தது .அத்துடன் ஒரு சொந்த காரன் வந்த்திருக்கிறான் என்ற உணர்வும் இருந்தது .

மொத்தம் 13 பேர் அந்த அறைக்குள் இருந்தார்கள் .அவைகளில் பலர் சரம் கட்டி இருந்தார்கள் , சிலர் ஷர்ட் போட்டு இருந்தார்கள் சிலர் வெறும் மேலோடு இருந்தார்கள் ..ஏன் வெறும் மேலோடு இருந்தார்கள் என்பது உள்ளே வந்து 10 நிமிஷத்தில் எனக்கு புரிய ஆரம்பித்தது .முன்னுக்கு இருக்கும் கம்பி கதவை விட வேறு எந்த ஜன்னலுமே இல்லாத அந்த அறையில் இயல்பாகவே காணப்படும் வெட்கையை அளவுக்கதிகமாக இருந்த ஆட்களிளில் இருந்து வரும் வெட்கை அதிகரிக்க செய்தததில் எனக்கும் வேர்க்க தொடங்கி இருந்தது இலிருந்து புரிந்து கொண்டேன் .

வேர்வை பசி கவலை அழுகை எல்லாமே சேர்ந்த உணர்வுடன் அவர்கள் உபசரிப்புடன் அந்த சாப்பாட்டை சாப்பிட முயன்று தோற்று கொண்டிருந்தேன் சாப்பிட முடியல அது அந்த சாப்பாட்டின் டேஸ்ட் ஆ ? அல்லது என் மனசு ஒரு நிலையில் இல்லாததா தெரியல ,அந்த பார்சலை அப்படியே தூக்கி அங்கே குப்பை போடுவதற்கு என்று இருந்த ஒரு சொப்பிங் வாக் ஒன்றில் அதை போட்டேன் ..

பின்னர் அந்த இருக்கை மாதிரி இறந்த திண்ணையில் உள்பக்கமாக கொஞ்சம் கக்கூஸ் இருந்த பக்கமாக எனக்கு ஒரு இடம் ஒதுக்கினார்கள் இருப்பதற்கு அங்கே அப்படி தான் உள்ளே வந்த ஒழுங்கின் படி கதவு பக்கமாக இடம் ஒதுக்குவார்கள் கதவு பக்கமாக இருப்பது கொஞ்சம் காத்து வரும்.அத்துடன்
வெளியே திரயும் போலீஸ்காரர்கள் , பெண் போலீசாரை விடுப்பு பார்க்கலாம் .அதற்காக அந்த இடங்கள்எப்பவுமே அங்கே இருக்கும் சீனியேர்ஸ் இற்கு உரியதாக இருக்கும்

அங்கே இருப்பவர்கள் அனைவரும் வெவ்வேறு காலப்பகுதியில் அங்கே வந்தவர்கள் ..அவர்கள் அனைவருமே அவசரக-ால சட்டம் அல்லது பயங்கரவாத தடுப்பு சட்டம் ஆகியவற்றில் உள்ளே வந்தவர்கள் ..

எல்லாவித விசாரணைகளும்முடிந்தவர்கள் அல்லது நீதி மன்றால் இனி மேலும் விசாரிக்க கால அவகாசம் வழங்க படாதவர்கள் சாதாரண சிறைசாளைகளுக்கு மாற்ற படுவார்கள் … முதல்கட்ட விசாரணை முடிந்தவர்கள் இங்கே இடம் காணாத பட்சத்தில் பூசா தடுப்பு முகாமுக்கு அனுப்ப படுவார்கள் .. பூசா தடுப்பு முகாம் அல்லது பூசா சிறைசாலை என்பது இலங்கையில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவு (TID ) , குற்றவியல் தடுப்பு பிரிவு (CID ) , கொழும்பு குற்ற தடுப்பு பிரிவு ( CCD ) மற்றும் சாதாரண போலீஸ் நிலையங்களில் தடுப்பு காவலில் வைத்து விசாரிக்கப்பட்டவர்கள் மேலதிக விசாரனைக்காகா தடுத்து வைக்கப்படும் இடம் ..அங்கிருந்து திரும்பவும் அந்த அந்த
துறையை சேர்ந்தவர்கள் அவர்களை (கைதிகளை ) திரும்ப பெறலாம் இதற்கு நீதிமன்ற அனுமதிகள் தேவையில்லை ஆனால் சாதாரண சிறை சாலைகளுக்கு அனுப்பபட்டவர்கள் மேலதிக விசாரணைக்கு என திரும்ப பெறுவது மிக கடினம் அப்படி பெறுவது ஆயினும் உரிய காரணம் நீதி மன்றில் சமர்ப்பிக்க பட்டு அதற்கான அனுமதி பெறப்பட வேண்டும் அதுவும் கூடிய காத்துக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது எனவே சாதாரண சிறை சாலைக்கு மாத்துவது என்பது அங்கிருப்பவர்களை பொறுத்தவரை விடுதலையே

இப்படி இந்த இரண்டு இடங்களுக்கும் இன்னமும் மாற்றப்படாத ஆறு எழு மாதங்கள் தாண்டியவர்களே அங்கே இருந்தவர்கள் அவர்கள் என்னை என்னத்துகாகா பிடித்தார்கள் என்று கேட்டனர் .

இப்போ எனக்கு கொஞ்சம் மன அமைதி ஏற்பட்டது.. எனக்கு எந்த சூழ்நிலை என்றாலும் இனி நடக்கிறது நடக்கட்டும் என்று மனதை கட்டுப்படுத்தும் தன்மை கொஞ்ச நேரத்தில் வந்து விடும்

அவர்கள் சொன்னார்கள் நீங்க பயப்பிட தேவையில்லை..நாங்க ஒருவருக்கும் சொல்ல மாட்டோம் சொல்லுங்க என்று.

அப்போ தான் எனக்கு அது புரிந்தது இங்கே நாம் கதைப்பவற்றை விசாரிப்பவர்கள் அறியலாம் ஒன்றில் ஒட்டு கேட்கும் கருவிகள் மூலம் அல்லது இங்கிருப்பவர்கள் யாராவது சொல்லலாம் இருந்தாலும் எனக்கு அங்கு சொன்னதுக்கும் இவர்களுக்கு சொல்ல போவதற்கும் வித்தியாசம் எதுவுமே இருக்க போவதில்லை .எனவே சொன்னேன்

அவர்கள் கேட்டார்கள் ஓ ..இந்த கேசில் தங்களுக்கு தெரிந்தே பலரை பிடித்து விட்டார்கள் உண்மையில் நீங்களும் அதில் நின்று இருந்தீர்களா ? என்று கேட்டனர்

நான் அவர்களுக்கும் உண்மையை தான் சொன்னேன் இல்லை என்று .. ஆனால் அவர்கள் நம்பவில்லை ..நான் பல்கலை கழக மாணவன் என்ற படியால் கொஞ்சம் மரியாதை தந்து கதைச்சு கொண்டிருந்தார்கள்

இது உண்மையில் கொஞ்சம் தர்மசங்கடமான நிலைமை நான் எதுவுமே செய்யாவிட்டாலும் என்னை அதை செய்திருப்பேன் என்ற வகையில் எனக்கு மரியாதை தருவது என்பதை கடந்து செல்வது.

நிகழ்வுடன் நேரடியாக தொடர்பு பட்டவர்கள் ,சிலர் அப்படி நிகழ்வு நடக்க போகிறது என்று தெரியாமலே தொடர்பு பட்டவர்கள் .. மிக மிக சிலர் என்னை போல எந்த விதத்திலும் தொடர்பு படாமல் வெறும் சந்தேகத்தில் மட்டும் மட்டும் இருப்பவர்கள் .

ஒரு சம்பவத்துடன் தொடர்பு பட்டவர்கள் என்று சொல்லி பலர் கைது செய்யப்பட்டிருந்தனர் சில கேஸ் களில் 15 பேருக்கு மேற்பட்டவர்கள் கூட கைது செய்யப்பட்டிருந்தனர் .அப்படி பட்ட ஒரே கேசில் கைது செய்யப்பட்டவர்களை அந்த மூண்டு அறைகளிலும் பிரித்து பிரித்து வைத்திருந்தார்கள்

அவர்களுக்குள்ளே ஒரு ஒற்றுமை வந்து பொய்யை எல்லோரும் ஒன்றாக சொல்ல கூடாது என்று விஜயரட்ன அப்படி பிரித்து வைத்திருந்தான் இப்படியான ஒரு கேசில் கைது செய்யப்பட்டவர்கள் பிரிந்து இருந்தாலும் அவர்களிடையே ஒரு ஒற்றுமை இருக்க தான் செய்தது .

இவ்வளவு விடயங்களும் அங்கிருக்கும் போது ஒவ்வொரு நாளும் அறிந்தவை .உண்மையில் அவர்கள் கதைகள் அவர்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் எல்லாம் விரிவாக சொன்னால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நாவலாக விரியும் அதனால் அதை இங்கே சொல்லாமல் விடுகிறேன் .

இது உண்மையில் கொஞ்சம் தர்மசங்கடமான நிலைமை ..நான் எதுவுமே செய்யாவிட்டாலும் என்னை அதை செய்திருப்பேன் என்ற வகையில் எனக்கு மரியாதை தருவது என்பதை கடந்து செல்வது.

எவ்வளவு சொன்னாலும் நம்பவில்லை அவர்கள் ,அதற்கு காரணமும் இருந்தது .நான் அதில சம்பந்தப்படிருப்பேன் என்றே நினைத்தார்கள் ஏனெனில் அங்கிருப்பவர்களில் சிலர் நேரடியாக சம்பவங்களில் ஈடு பட்டிருந்தாலும் விசாரனைக்காக அப்படி இல்லை என்று சொல்லி கொண்டிருப்பவர்கள்
அதனால் உள்ளுக்குள் என்னையும் அப்படியே நினைத்தார்கள் அவர்கள் எல்லோரும் ஒரே அறையில் பல மாதங்கள் இருந்தாலும் ஒருவரை ஒருவர் உள்ளே நம்பவில்லை அதற்கு காரணம் விசாரணைக்கு என்று மேலே அழைத்து செல்லும் போது தனியே தான் அழைத்து செல்வார்கள் அங்கே என்ன கேட்கிறார்கள் அதற்கு இவர்கள் என்ன சொன்னார்கள் என்பது எவருக்குமே தெரியாது இவனிடம் உள்ளே நடந்தது என்ன என்று கேட்டிருப்பார்களோ ? என்ற சந்தேகம் அவர்களுக்கு இருக்கும் ..காரணம் அவர்கள் போகும் போது கூட அப்படியான கேள்விகளை கேட்பான் விஜயரட்ன ...

அதனால் அந்த அறையில் இருப்பவர்கள் மேலாக ஒற்றுமையாக பழகினாலும் உள்ளுக்குள் ஒருவரை ஒருவர் சந்தேகப்பட்டு கொண்டே இருப்பார்கள்

அங்கே இருப்பவர்கள் அனைவருமே எதோ ஒரு விதத்தில் விடுதலை புலிகளின் வன்னி தவிர்ந்த நடவடிக்கைகளில் எதோ ஒன்றுடன் தொடர்பு பட்டவர்கள் ..அவர்களில் சிலர் முக்கியமான

அன்று எனக்கு தெரியாது இவர்களுடன் இதே அறையில் தான் நான் 3 மாதங்கள் இருக்க போகிறேன் என்று . என்னை வெறும் சந்தேகத்தில் பிடித்த படியால் ஐந்தாறு நாளில் விட்டு விடுவார்கள் என்றே நினைத்தேன் .அதை அவர்களுக்கு கூறிய போது சிரித்தார்கள் .. இங்கே வந்தவர்கள் குறைந்தது 3 மாதங்களுக்குள் வெளியே போனது இல்லை என்றார்கள்

எனக்கு ஒரு அளவுக்கு நிலைமை புரிய தொடங்கியது இருந்தாலும் எனக்கு அடி பெரிதாக விழவில்லை என்பது அவர்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.. ஏனெனில் விஜயரட்ன பிடிச்சு அடிக்கவில்லை என்பது வினோதமான ஒன்றாகவே அவர்கள் பார்த்தார்கள்

என்னிடம் எல்லா விவரங்களும் கேட்டு முடிஞ்ச நேரம் இருள தொடங்கி விட்டது ..இரவு சாப்பாடு வந்தது ஒரு சின்ன பார்சல் ..அதற்குள் கடலை யும் சம்பலும் இருந்தன .பசியாக இருந்ததால் உடனே பிரித்து சாப்பிட்டேன் .

சிறு நீர் கழிக்கணும் போல இருந்துச்சு ..முன்பக்கம் அரை சுவர் மட்டுமுள்ள அந்த அறையின் பின்பக்க இடது மூலையில் உள்ள கக்கூஸ் இல் சிறு நீர் கழித்தேன்.ஒரே அறையில் கதவுகளே இல்லாத கக்கூஸ் . அதிலே 13 பேர் இருக்கவே கஷ்டமாக இருக்கும் அந்த இடத்தில் எப்படி இவ்வளவு பெரும் படுப்பது ? இந்த கேள்வி க்கு விடை தெரியும் நேரமும்

நெருங்கியது .

இரவு பத்து மணி

அந்த போலீஸ்காரர் டியூட்டி மாறுகிறார்கள் எனபது புரிந்தது

அங்கே இருந்த அந்த குண்டான பெடியன் கிருஷ்ணா ஒரு புத்தகத்தில் இருந்து காசு எடுத்து ஒரு போலீஸ் கான்ஸ்டபிளை கூப்பிட்டு காசு கொடுத்து சிங்களத்தில் 13 ப்ளேன் டீ க்கு சொல்லி விட்டான் ..

புதிதாக டியூட்டி வந்தவர்கள் எங்களை எண்ணி பொறுப்பு எடுத்தார்கள பின்னர் படுப்பதற்கு ஆயத்தமானார்கள் என் அறையில் இருந்தவர்கள் கக்கூஸ் இற்கு மேலே நியூஸ் பேப்பர்கள் கொண்டு மூடினார்கள் அந்த இடத்தில் இருவர் படுக்கணும் அன்று தான் நான் புதிதாக வந்திருந்த படியால் எனக்கே அந்த இடம் எனக்கு தரப்பட்டது ஜெனா என்ற பெடியனும் என்னுடன் சேர்ந்து அந்த இடத்தில் படுத்தான் .

அது எப்படி வார்த்தைகளால் சொல்ல முடியும் என்று தெரியவில்லை அது ஒரு மறக்க முடியாத இரவு திரும்பி கூட படுக்க முடியாது நேரே படுக்கணும் கால் கீழே தொங்கும் கீழே கால் தொங்கும் இடத்தில் வேறே காலில் படும் ஆம் அங்கள் பக்கம் காலை நீட்டி கீழே உள்ள தரையில் இருவர் படுத்து இருந்தார்கள் அவர்களில் தலைப்பக்கமாக தலை வைத்து கதவு பக்கம் கால் வைத்து இருவர் படுத்திருந்தார்கள் திண்ணை போன்ற இருக்கும் இடத்தில் இருவர் படுத்திருக்க அந்த இடம் ஆதலால் மட்டும் நிரம்பி இருந்தது ..எவருமே திரும்பி ஆசுவாசமாக கூட படுக்க முடியாது .

மிஞ்சியவர்களை வெளியே எடுத்து ஒரு கைக்கு விலங்கு போட்டு எங்கள் கம்பி கதவில் அதை பிணைத்து அவர்களை கம்பி கதவுக்கு வெளியே படுக்க வைத்திருந்தார்கள் அவர்கள் கூட திரும்பி படுக்க முடியாது ஆனாலும் அவர்களுக்கு காத்து நல்லா வரும் என்பதால் அப்படி படுக்க சிலர் விரும்பி போவார்கள்

இது தான் என் வாழ்க்கை இனி வர போகும் நாட்களில் என்ற நினைப்பே எனக்கு அழுகையாக வந்தது ஜீரணித்து கொள்ள முடியாது ஆயினும் இப்படியான படுக்கும் சூழ்நிலை எனக்கு ஏற்கனவே கிடைத்திருக்கிறது .

1997 ஆம் ஆண்டு மாங்குளம் பகுதியில் இருந்து குடும்பத்துடன் வவுனியா வந்த எம்மை வேப்பங்குளம் முகாமில் வைத்திருந்தார்கள் அங்கேயும் இப்படி தான் படுத்திருந்தோம் ஆனால் அங்கே கொஞ்சம் இதை விட வசதி அத்துடன் அங்கே எங்கள் குடும்பமும் இருந்ததால் இப்படி பீல் பண்ணியது இல்லை.

இப்படியே காலை விடிந்தது இடையில் எவருக்கும் அவசரம் வரவில்லை வந்திருந்தாள் நாங்கள் தான் எழும்பி விட்டிருக்க வேண்டும் அவர்கள் அவசரத்தை நிவர்த்தி செய்ய .. எங்களுக்கு முகம் கழுவுரத்து குளிக்கிறது எல்லாமே அந்த கக்கூஸ் தான் ,, குளிக்கிறது குந்தி தான் இருக்க வேண்டும்.. எழுந்து நின்றால் முன்னே கட்டி இருந்த சுவருக்கு மேலே எங்கள் இடுப்பு பகுதி நிற்கும் ..

இப்படியாக எல்லாம் முடித்து இருக்க ப்ளேன் டீ வேணுமா என்றார்கள் ?? அதெல்லாம் தருவார்களா இங்கே என்று பார்த்து கொண்டிருக்க அங்கே இருந்த அந்த குண்ட்டான பெடியன் கிருஷ்ணா ஒரு புத்தகத்தில் இருந்து காசு எடுத்து ஒரு போலீஸ் கான்ஸ்டபிளை கூப்பிட்டு காசு கொடுத்து சிங்களத்தில் 13 ப்ளேன் டீ க்கு சொல்லி விட்டான் ..

அங்கே காசு எப்படி வந்தது என்று யோசிகிறீங்க தானே .. அங்கே இருப்பவர்கள் ஆறு மாதத்துக்கு மேலே இருப்பவர்கள் ,,அவர்களை பார்க்க என்று குடும்பத்தில் ஒருவர் இரண்டு கிழமைக்கு ஒரு தடவை வரலாம் ..அப்படி வரும் போது அவர்களை வெளியே எடுத்து அவர்களை கதைக்க விடுவார்கள் .. என்ன தான் சித்திரவதை - அடி உதை - அங்கே நடந்தாலும் அந்த இடத்துக்கு செஞ்சிலுவை சங்க அதிகாரிகளும் அனுமதிக்க படுவார்கள் சில நேரங்களில் ..ஆனால் அப்படி அனுமதிக்கப்படும் போது அடி காயங்கள் மறைந்து இருக்கும்..அல்லது அப்படியானவர்களை பார்த்து கதைக்க அனுமதிக்க மாட்டார்கள்

அப்படி வரும் செஞ்சிலுவை சங்க அதிகாரிகள் எல்லாவற்றையும் கேட்பார்கள் ,,தமிழில் கதைப்பார்கள் ,அவர்களை முதல் தடவை சந்திக்கும் எவருமே கடவுளை கண்ட மாதிரியும் இவர்களிடம் சொன்னால் இனி அடிக்க மாட்டார்கள் என்றும் நினைப்பார்கள் ஆனால் நடப்பது தலை கீழாகவே அமையும் ஆனாலும் செஞ்சிலுவை சங்க அதிகாரிகள் மூலம் சில நன்மைகள் கிடைக்க தான் செய்தது அவர்கள் முக்கியமாக சில மருந்துகள் தருவார்கள் .அதில் சித்தாலேப என்பது எங்களுக்கு எந்த நேரமும் எங்களுக்கு உதவியாகவே இருக்கும்

**என்ன இவரை தெரியாதா ?? என்றான்**
**பார்த்த மாதிரி இருக்கு ஞாபகம் வருதில்லை என்றேன்**
**இவர் தான் “வித்தியாதரன் “ உதயன் பேப்பர் காரர் என்றான்**

அங்கே ஒரு சின்ன அறைக்குள் சப்பாணி கட்டி எவ்வளவு நேரம் தான் இருப்பது .அப்படி சும்மா இருக்கும் போதே முதுகு எல்லாம் நோகும் .அதில வேற இடைக்கிடை விசாரனைக்கு என்று அடித்து அனுப்புவார்கள் அவர்களை அப்போ அவர்களுக்கு எல்லா நோவுக்கும் மருந்தாக சித்தாலேபவே பூசப்படும் .
அநேகம் பலருக்கு காயங்கள் வராமல் தான் அடிப்பாங்க சிலிக்கன் பைப்பால் அடிக்கும் போது காயங்கள் வராது..இருந்தும் சிலருக்கு அதையும் மீறி தோள்கள் கூட கிழிந்து இருக்கும் ..சிலருக்கு தலை கீழாக கட்டி தொங்க விட்டு பெற்றோல் தோய்த்த சொப்பிங் பாக் ஐ தலைக்கு கட்டி விட்டு அவர்களை மூச்சிரைக்க விட்டு உண்மையை சொல்லு என்று விசாரிப்பாங்க .சிலருக்கு தலை கீழாக அவர்களின் கால் விரல்களில் மட்டும் கட்டி விடுவார்கள் ..இப்படி சித்திரவதை அனுபவித்தவர்களுக்கு எல்லாம் ஒரே ஒரு மருந்து இந்த சித்தாலேப தான்.

அத்துடன் செஞ்சிலுவை சனங்க அதிகாரிகள் எங்களுக்கு படிக்க கதை புத்தகங்களும் தருவார்கள் .

வீட்டு ஆட்கள் வரும் போது கதைத்து விட்டு போகும் போது காசு தந்து விட்டு போவார்கள் சட்டப்படி காசு அனுமதிக்க முடியாது சிறை அறைக்குள் ஆனால் அங்கே இருந்த காலத்தில் அங்கே இருந்த போலீஸ் ஆட்களுடன் பழகி காசு மட்டும் அனுமதித்திருந்தார்கள் அதற்கு அவர்களுக்கும் காசு கொஞ்சம் கொடுக்க வேண்டும் ஆனாலும் OIC இற்கு தெரியாமல் பார்க்க வேண்டும் என்பார்கள் அவருக்கு தெரிந்தே இருக்கும் என்றே நான் நினைக்கிறேன்

அப்படி வந்த காசை புத்தகங்களுக்குள் வைத்திருப்பார்கள் அதிலும் சிலருக்கே அப்படி குடும்பத்தவர்கள் வருவார்கள் அதிலும் சிலர் மிக வறுமை கோட்டுக்குள் இருந்ததனால் ஒரு சிலருக்கே காசு வரும்..ஆனால் காசு வந்தால் எல்லோருக்குமே சேர்த்து தான் செலவளிப்பார்கள் அந்த சின்ன அறையில் ஒருவர் விரும்புவதை மட்டும் வாங்கி சாப்பிட முடியாது.

அந்த கட்டிடத்துக்கு முன்னாள் ஒரு தேத்தண்ணி கடை இருந்தது அதில் போய் அந்த போலீஸ்காரன் ப்ளேன் டீ வாங்கி வந்தான் அதிர்ந்து விட்டேன்

ப்ளேன் டீ மிக சிறிய சொப்பிங் பாக் ஒன்றிருந்தது ஒரு சின்ன ஸ்ட்ரோவ் ஒன்றும் இருந்தது முதன் முதல் அப்படியும் ப்ளேன் டீ குடிக்கலாம் என்று அறிந்து கொண்டேன் புதுமையான அனுபவம்

காலை 8 மணி இருக்கும். நான் முதல் முதல் உள்ளே வரும் போது பார்த்தேன் என்று சொன்னேன் அல்லவா ஒருவரை மேலே என்னை விசாரிச்ச இடத்தில் இருந்து பேப்பர் வாசித்து கொண்டிருந்தார் என்று..அவரை எங்கேயோ பார்த்தது போல இருந்தது என்றும் சொல்லி இருந்தேன் அல்லவா .

அவர் இப்போ கீழே இறங்கி வந்தார் அவர் கையில் டூத் பிரஸ் இருந்தது தோளில் ஒரு துவாய் இருந்தது பார்த்தவுடன் தெரிந்தது அவர் முகம் கழுவ அல்லது குளிக்க போகிறார் என்று அவர் எங்கள் அறையை கடந்து இடப்பக்கமாக போய் கொண்டிருந்தார் அந்த பக்கம் ஒரு குளியல் அரை இருந்தது அது போலீஸ்காரர் பயன்படுத்துவது .
அதை நோக்கி போய் கொண்டிருந்தார்
யார் இவர் என்ற யோசனை திரும்ப என்னுள்ளே எழுந்த சமயம் அங்கே இருந்த ஜெனா கேட்டான் இவரை தெரியுமா ?

நான் இல்லை என்றேன் .

என்ன இவரை தெரியாதா ? என்றான்

பார்த்த மாதிரி இருக்கு ஞாபகம் வருதில்லை என்றேன்


இவர் தான் “வித்தியாதரன் “ உதயன் பேப்பர் காரர் என்றான்

எனக்கு இப்போ புரிந்தது இவர் யார் என்று கடந்த சில நாட்களாக எல்லா செய்தி தாள்களிலும் தலைப்பு செய்தியாக இடம் பெற்று இருந்தவர் யாழ்ப்பாணத்தின் அரசியலை தனது எழுத்துகள் மூலம் ஒரு முனைப்படுத்த முயன்றவர் மூத்த ஊடகவியலாளர் வித்தியாதரன் அவரை பற்றி யும் அவரின் எழுத்துகளை பத்திரிகைகளிலும் படித்திருந்தாலும் அவரை நேரில் சந்திக்கும் சந்தர்ப்பம் எனக்கு இதுவரை கிடைக்கல

இப்படி ஒரு இடத்தில் இப்படியான சூழ்நிலையில் தான் அவரை சந்திப்பேன் என்றும் நினைக்கவில்லை வெள்ளை வான் ஒன்றில் கடத்த பட்டவர் எப்படி இங்கே இருக்கிறார் ?என்ற எனது கேள்விகளுக்கும் நாங்கள் எல்லோரும் உள்ளே இருக்கும் போது இவருக்கு மட்டும் ஏன் இவ்வளவு வசதி என்றும் என்னுள்ளே எழுந்த கேள்விகளுக்கு நான் அங்கே இருந்த காலங்களில் விடை கிடைத்திருந்தன ,,ஆனாலும் நான் ஏற்கனவே சொன்ன மாதிரி அவை எல்லாம் சொல்ல வெளிக்கிட்டால் அது இன்னொரு நாவலாக விரியலாம் என்பதால் அதையும் இங்கே தவிர்க்கிறேன்

சரியாக 10 மணிக்கு அம்மா வந்திருந்தா என்னை கண்டு அழகூடாது என்று வந்திருந்தாலும் கண்டவுடன் வந்த அழுகையை அம்மாவால் கட்டுப்படுத்த முடியல என்னாலும் தான்..பின்னர் எனக்கு என்று கொண்டுவந்த உடுப்புகளையும் காசையும் தந்து விட்டு அம்மா போய் விட்டார்.

**டைட்டானிக் கப்பலை கட்டி முடிக்க வெறும் 7 மில்லியன் டாலர்களே செலவானது. ஆனால், அது பற்றி படம் எடுக்க 200 மில்லியன் டாலர்கள் செலவிடப்பட்டது.**



# நினைத்துப்பார்க்கின்றேன்.

கூடலின் பின்னரான
பொழுதொன்றில்
என் அரவணைப்பினுள்
உனை மறந்து
நீ ஓய்வுகொண்டவேளையில்
இன்னமும் உன்னை
நெருக்கமாய் இறுக்கினேன்,
நீயும்
தாயின் மடிச்சூடுகண்ட
சேயாய்
என்னுள் ஒடுங்கினாய்,
கலைந்த நெற்றிமுடி விலக்கி
மெதுவாய் இதழ்பதித்து
முத்தமொன்றை இட்டுவிட்டு
உன் விழிகளை நோக்குகையில்
'அன்பின் வழியது உயிர்நிலை'
என்பதாகிவிட்டிருந்தாய்.

இருளின் போர்வைக்குள்
மௌனமொழியுடைத்து,
அன்பே,
தேவகுமாரனை அவர்தம்
சீடர்கள் மறுதலித்ததனைப்போல்,
என்றோவோர்நாள்
ஓர்முறையேனும் நீயும்
என்னை மறுதலிப்பாயென்றேன்.
காட்டாற்று வெள்ளம்
கரையுடைத்து
உன் விழிகளில்பாய
உன் பதிலுக்கான வார்த்தைகள்
மொழிகளில்
இல்லையோ என்னவோ
கோபத்துடன்
உன் கைகளால்
என் நெஞ்சில்
குத்திவிட்டு மறுபுறம்
திரும்பித்தூங்கிவிட்டாய்.
இன்று
இதனையும் நீ
மறந்திருக்கலாமென்று
உனக்காகவும் சேர்த்து
நினைத்துப்பார்க்கின்றேன்...

வண்ணன்

# கவிதைப்



## ஜீவிதம்

*காலம் எனும் நதி*
*சுழிந்தோடி*
*அந்த மண்ணில் கிடந்த*
*அத்தனை*
*அடையாளங்களும்*
*இழுத்துச் சென்றாலும்.....*

*எங்கேயோ தரித்த*
*இடங்களில் அவற்றை*
*பத்திரப்படுத்த*
*பெரும் பாடுபடுகிறது....*

*ஆசைகளை நிராசைகளாக்கி*
*தேடல்களை தொலைத்து*
*அசாத்திய துணிவுகளோடு*
*சவால்களை சந்தித்து*
*வர்ணக் குழம்புகளால்*
*குளித்து மகிழ்கிறது மனசு....*

*வாழிடத்திலிருந்து*
*வழிகாட்டிச் செல்கிறது*
*வற்றாத ஜீவநதி*
*புதிய தேடல்களோடு......*

சுபாரஞ்சன்
டென்மார்க்

## காதலே நீ

காதலே நீ ......
மழைத்துளிச் சிதறலிலும்
மழை ஓய்ந்த ஈரப் பொழுதிலும்
நீ தான் ஈரமாய் சொட்டிக் கொண்டிருக்கிறாய்......!
காற்றாய் அலையும் ஈரமும்
கவிதையாய் கரையும் துயரமும்
நேற்றைப் போலவே கண்ணீராய் கனக்கிறது....!
கூடவே நாமிருவரும் அமர்ந்த
வீதிச்சாலைக் கதிரைகளில் நடந்து
திரிந்த தெருக்கள் எங்குமே
நீயே கூடி வருகிறாய்.....
தணலெறிக்கும் அனல் காற்றாய்
உன் நினைவுகள்
தள்ளிவிட முடியாத கனவுகளும்
காதலே இதைவிடச் சாதல் மேலென்பேன்.

சாந்தி நேசக்கரம்

## எங்கே நிம்மதி

உயிர்கள் அடங்கி
உடமைகள் அழிந்து
கனவுகள் தொலைந்து
காலம் வீணாய்ப் போகிறதே

அன்பு தொலைந்து
அடிமை பெருகி
யுத்தம் நிறைந்து
பூமி உடைந்து போகிறதே

சித்தம் கலங்கி
நித்தம் வாழ்வில்
உயிரை உடைத்து
தசையை கிழிக்க
ரத்தம் பெருகிக் போகிறதே.

இயற்கையும் சீறி
இயல்புகள் மாற
அழிவுகள் துரத்த
அமைதி இழந்து போகிறதே

சுபாரஞ்சன்.
டென்மார்க்

## குற்றம் கடிதல்

பாலிதீன் பைக்குள்
கடைசி மணித்துளியின்
காற்றை வெளியிட்டு
உள்ளிழுக்க மறந்து
செத்துப்போன மீனொன்று

வண்ணத்துப்பூச்சி இசைக்குழு
தங்களை அன்புடன்
வரவேற்கிறது
என்று பாடியபடி
பார்வையற்ற சிறுமி ஒருத்தி

பன்றியும் நாயும்
புணர்தலை
படமாக்கிக் கொண்டிருந்த
ஒருவன்

மீண்டும் மீண்டும்
நினைவில் வரும்
பால்யத்தின் பெண்ணொருத்தி

கணவனின் காதலியும்
மனைவியின் காதலனும்
பரிமாறிக்கொள்ளும்
மௌனங்கள்


வீழ்ந்து அழித்த
ஓர் மழையில்
மிதவை கட்டிவந்த மீட்பர்கள்

என இவர்கள்
எல்லோரும் தான்
என்னை கவிதை வாசிக்கச்
சொன்னார்கள்.

**ரியாஸ் அஹமது.**
உத்தமபாளையம், தேனி

# ஒரு பிடி உணவும் ஒரு சாவும்

மாலினி



**வா**சலில் ஆரவோ நிக்கிற அசைகை தெரியுது ஆரெண்டு பார் குட்டிம்மா" உள்ளே இருந்து சத்தமாக வந்த பாட்டியின் குரலுக்கு வீட்டின் பக்கவாட்டில் நின்ற வேம்பில் இருந்து உதிர்ந்து கொண்டிருந்த பூவையும் பிருகையும் வானத்தில் இருந்து தேவர்கள் பூமாரி பொழிந்த பூரிப்பில் அண்ணாந்து கண்களை மூடி கைகள் இரண்டையும் விரித்து ரசித்துக் கொண்டிருந்த அவள் தன் கனவு கலைந்தது போல் கண் திறந்தாள். தலையை மெதுவாக அசைத்து கண் இமைகளில் கிடந்த பூ இதழ்களை உதறி விட்டாள். உதடுகளை மெதுவாக ப் பூ என்று ஊதி ஈர உதடுகளில் ஒட்டிக் கிடந்த வெள்ளைப் பூக்களை விலக்க முனைந்தாள். பின் உள்ளங்கைக்குள் சிறைப்பட்டுக் கிடந்த சின்னப் பூக்களை பொக்கிஷம் போல் பொத்திக் கொண்டே வாசலுக்கு போனாள்.

வாசலில் நின்ற மனிதன் நடுத்தர வயது மதிக்கத்தக்க தோற்றத்தில் இருந்தான். சற்று அதிக குள்ளமாக பழுப்பு நிறப் பாறாங்கல்லில செதுக்கின மாதிரி நிறமும் உடல் அமைப்புமாக , தலை நிறைய முள்ளம் பன்றி போல குத்திட்ட , ஆனால் வயதின் தோற்றத்துக்கு சற்றும் ஒவ்வாத விதத்தில் முழுவதும் வெண்பனியில் உருண்ட கரடிக் குட்டியின் தலை போல இருந்தான். எப்போதும் அந்த வழியால் அவன் போக வரும் போது கண்டது தவிர அறிமுகமற்றவனாக இருக்க, " யாரு நீங்க ? என்ன வேண்டும் ?" என்றாள் இயல்பாய். அவன் பதில் சொல்லாமல் இயல்புக்கு மாறாய் உணர்வுகளைப் பிரித்தறிய முடியாத பார்வையில் பார்த்துக் கொண்டிருந்தான். சற்று அதட்டலாக "யார் நீங்க என்ன வேணும் கேக்கிறேன் எல்லா" என்றாள். பதில் வரவில்லை. சற்று தலை சரித்து கொஞ்சம் மந்தகாசமாக ' ஈ ' என்பது போல சிரித்தான்.

"யாரு கண்ணம்மா அது ?" வேப்பமரத்துக்கும் வைக்கோற் போருக்கும் இடையில் நின்ற திருவாட்சிக்குக் கீழ்

சாய்மனைக்கதிரை சாய்ந்திருந்த தாத்தா திருவாட்சி மலர் இதழ்களை விட மென்மையாக கேட்டுக் கொண்டே எழுந்து வந்தார். வாசலில் நின்ற மனிதனைப்பார்த்து "என்னப்பா நீ ............... (இடத்தை குறிப்பிட்டு) அந்தக் குடியேற்றத் திட்டக் காணிக்குள்ள இருக்கிறனீ எல்லோ" என்றார் விசாரிப்பது போல. அந்த மனிதன் தலையாட்டிய விதமும் முகத்தை இறுக்கமாக்கி வைத்துக்கொண்டு ' ஈ' என்று இளித்த விதமும் அப்போதும் அசாதாரணமாக இருந்தது. பின் "தண்ணி தண்ணி வேணும் " என்று அவன் சொன்ன குரலிலேயே தொண்டை வரட்சி தெரிந்தது.

அவள் ஓடிப் போய் செம்புடன் தண்ணீர் கொண்டு வந்தாள். செம்பை கைகளில் வாங்கிப் பருகாமல் , கை மடக்கி உள்ளங்கையில் உதடு வைத்துக் குனிந்த மனிதனைக் காண மனம் நெருடலாக இருந்த போதும் சில நடைமுறைகளுக்கான காரணம் தெரியவில்லை அவளுக்கு. 'மடக் மடக் ' என்று அந்த மனிதன் குடித்த அவதியில் அவனது தலையில் மெதுவாகக் கைவைத்து "போதும் " என்றார் தாத்தா. அவன் இன்னும் வேணும் என்பது போல பார்க்க. "சாப்பிட்டியா?" என்றார். "இல்லை" என்பதாக தலையசைத்தான். "வா உள்ளே வந்து சாப்பிடு " என்ற அழைப்பில் கனிவிருந்தது.

"கிணற்றடித் தொட்டியில் தண்ணி இருக்கு, கைகாலை அலம்பீட்டு வா" சொல்லிக் கொண்டே போய் பாட்டியிடம் சொல்லி சாப்பாடு எடுத்து விறாந்தையில் இலை போட, தயங்கித் தயங்கி வந்து சாப்பாட்டுக்கு முன் அமர்ந்த அந்த மனிதன் சாப்பிட்ட அவதியில் பசி அகோரமாகத் தெரிந்தது. "காலையில் ஏதாவது சாப்பிட்டியா?" அவன் சாப்பிடுவதை நாடியில் முட்டுக் கொடுத்து கொண்டு பார்த்தவாறே பாட்டி கேட்டா. " ம்ம் பத்துமணிக்கு பாணும் தேத்தண்ணியும் ..." ஒரு வித கொழ கொழ குரலில் சொல்லிக் கொண்டே அவசரமாக சாப்பிட்டான். அப்பவும் பாட்டி விடாமல் " கூலி வேலைக்கு போறனி .... இப்ப பாரு அஞ்சு மணியாச்சு இன்னுமா ஒரு பிடி சோறு சாப்பிடவில்லை. மனிசீட்ட சொல்லி பாசல் கட்டிக் கொண்டு போகக் கூடாதோ " என்றார். பின் தாத்தாவின் பார்வை கொடுத்த சமிக்ஞையில் அமைதியாக, அந்த மனிதன் சாப்பிட்டு விட்டு கைகழுவி, வந்து திரும்பவும் கைமடக்கி அரை செம்பு தண்ணியை குடித்து விட்டு பெரிதாக ஏப்பம் விட்டு அசடுவழிய புன்னகைத்தான்.

"இஞ்ச பார் தம்பி உன்ர பெயர் கூடத் தெரியாது எனக்கு. ஆனால் நான் சொல்லுறதைக் கேள். இப்பிடி வெறும் வயிற்றோட கிடந்தது சாகாதே. இதால போகேக்க வரேக்க பசிச்சால், தண்ணி மன்னி தேவை மாதிரிக் கிடந்தால், இதில வந்து கூப்பிடு என்ன. நான் இல்லை என்றால் பரவாயில்லை . இவள் நிண்டா போதும். இவளிட்டை மட்டும் கேளு என்ற குரலில் அதிகாரம் இல்லை ஆதூரம் இருந்தது. அந்த மனிதன் மெதுவா நிமிர்ந்து அவளைப் பார்த்தான். பின் ஒரு விதமான வழிந்த குரலில் "குழந்தை.....?" என்றான் கேள்வி போல. "அது என்னோட பேர்த்தி " என்று சொல்லிக் கொண்டே தாத்தா அவளைக் கைக்குள் அணைத்துக் கொள்ள, கை நீட்டி தயக்கமாக ஒற்றை விரலால் பட்டும்

> பணத்தாலும் பதவியாலும் , அந்தஸ்தாலும் மனித உறவு பேணுற பூமியை உனக்கு இப்ப புரியாது கண்ணம்மா.

படாமல் அந்த மனிதன் அவளது கன்னத்தைத் தொட்ட போது நிச்சயமாக அதில் விகல்பமாக எதுவும் இல்லாத வெள்ளந்தித் தனம் இருந்தது. இருந்தும் பாட்டிக்கு வழமை போல கண்களில் நெருப்பு எரிந்தது " வா குட்டிமா" என்று உள்ளே இழுத்துப் போனாள்.

அந்த மனிதன் போன பின் " அங்கால ஊர்க் கோடித் தொங்கலில சும்மா கிடந்த காட்டுக் காணியை பிரிச்சு இப்ப அரசாங்கம் உறுதி குடுத்த குடியிருப்புக்குள்ள கொட்டில் போட்டுக் குடுத்திருக்கெல்லே அதுக்குள்ளே இருக்கிற பெடியனப்பா. நான் அங்கன பக்கத்தில எங்கட தென்னங்காணிக்கு போக வரேக்க கண்டிருக்கிறன். சிலநேரம் மாடு பட்டியை குழப்பிக் கொண்டு ஓடினால் காவல்காரப் பெடியனோட சேர்ந்து துரத்திப் பிடிச்சுக் கொண்டு வந்து அடைப்பான். தேங்கா பிடுங்க , வயல் வேலை . எண்டு எதுக்குப் போனாலும் கேளாமல் ஓடிவந்து வேலை செய்வான். சம்பளம் கூட எதிர்பார்க்காமல் வேலை முடியத் திரும்பிப் போயிடுவான். பாவம். ஆருமற்றவன். .............. (ஒரு இடம் குறிப்பிட்டு) அங்கு இருந்து வந்த ஒரு குடும்பத்தோட கூடி கொண்டு வந்து இருக்கிறான். உழைச்சுக் குடுத்தால் வீட்டில ஒண்டிக் கொள்ள ஒரு மூலை கிடைக்கும் அவ்வளவு தான்" என்று பெருமூச்சுடன் முடித்துக் கொண்டு "அவன் எப்ப வாசலில நிண்டாலும் காசு குடுக்க வேண்டாம் வயிறார சாப்பாடு போட்டனுப்பும்" என்றார் பாட்டியிடம்.

"ஏன் தாத்தா குடும்பம் இல்லாமல் உறவு மனிதர்கள் யாருமில்லாத ஒரு மனிதன் இருக்க முடியுமா?" குழப்பமாகக் கேட்ட பேர்த்தியை கைகளுக்குள் அணைத்துக் கொண்டு , "பணத்தாலும் , பதவியாலும் , அந்தஸ்தாலும் மனித உறவு பேணுற பூமியை உனக்கு இப்ப புரியாது கண்ணம்மா. அதை நீயும் விளங்கில் கொள்ளக்காலம் வரும். அப்ப புரிந்து கொண்டு ஒதுக்க வேண்டியதை ஒதுக்கிற தெளிவு பெற்று விடுவாய்" என்றார். அது..... அவரது அந்த வாய் வார்த்தை அப்படியே ஒரு நாள் பலித்து, அந்த மனிதனுக்காகவே எல்லாவற்றையும், எல்லோரையும் ஒதுக்கும் நிலை ஒருநாள் அவளுக்கு வரும் என்பது அவருக்கும் அப்போது தெரிந்திருக்காது.

பின்னான காலங்கள் எப்போதும் எல்லோருக்கும் போல நகர்ந்து கொண்டு , அவள் வளர்ந்து கொண்டு, தாத்தா பாட்டி மூப்பெய்திக் கொண்டு, கடந்து போய்க்கொண்டிருக்க, அந்த மனிதனும் எப்போதாவது பசிக்கும் நேரம், தாகம் எடுக்கும் நேரம்மட்டும் வீட்டு வாசலை எட்டிப்பார்த்து பசியைத் தனித்துக் கொண்டு கடந்து போய்க்கொண்டிருந்தான். அங்கு

இங்கென தலை திருப்பாமல் குனியாமல் வளையாமல் ஒரே சீரான வேகத்தில் நடந்து செல்லும் இந்த இயந்திரத்துக்குள் எந்த உணர்வுகளும் இருக்காதா? கவலை , கண்ணீர் , மகிழ்ச்சி என்று ஏதும் உணர முடியாதா என்று அவள் பலமுறை அந்த மனிதனைப் பார்த்துச் சிந்தித்திருக்கிறாள். முடிவில் இல்லை என்று முடிவும் எடுத்திருக்கிறாள்.

பசிச்ச நேரம் கிடைத்தால் உணவு. நிறுத்து என்று சொல்லுமட்டும் வேலை... எப்படி முடிகிறது. இப்படி உணர்வுகள் அற்றிருப்பதெனில் எதற்கு இப்படி ஒரு பிறப்பு. அதைப் படைத்ததாகச் சொல்லப்படும் கடவுள் எதற்கு? எப்போதும் போல் அவளை அரிக்கும் பதில் கிடைக்காத பல கேள்விகளுக்குள் இதையும் கூட்டுச் சேர்த்துக் கொண்ட பின் ,

ஒரு நாள் தாத்தா இறந்து போனார். உறவு கூடி ஒப்புக்கு ஒப்பாரித்து, ஊர்க்கோடியில் கொண்டு போய் கொளுத்தி விட்டு வந்து மூன்று நாளான பின்னும், பாசத்துடன் கன்னம் வருடிக் கொண்டே இறுதியாய் தளர்ந்து துவண்ட அந்த வயதான கைகளும், "என்ர செல்லக் கண்ணம்மா கவனம்" என்று திக்கித் திக்கி வந்த இறுதிக் குரலும், கண்கள் குத்திட்டு வெண்படலம் படரும் கணம் வரை பார்வையில் இருந்த பாசமும் , விட்டுச் செல்கிறேன் என்ற பரிதவிப்பும், இதயத்தைப் பிடுங்கி கைகளில் வைத்துக் கசக்குவது போல் உருத்தெரியாமல் ஊமையாக வலித்துக் கொண்டிருந்தது அவளுக்கு . தெரியாத திசை எல்லாம் தாத்தாவின் தேம்பி அழும் குரலும் "கண்ணம்மா" என்ற அசரீரி போன்ற அழைப்பின் நினைவுகளுமாக பித்துப் பிடித்தவள் போல் அவள் ஒரு மூலையில் எவரோடும் ஒட்டாமல் ஒதுங்கியிருக்க,

கூட்டம் குவிந்து ஆட்டம் போட்டது போல வீடு நிறைய கசகசத்துத் திரிந்த சனக் கூட்டம் எரிச்சலாக இருந்தது. யாரோ எவரோ வேண்டியவர் வேண்டாதவர் என்று எல்லாம் நிறைந்து கொண்டு பெரிய பெரிய பாத்திரங்களில் செலவு வீட்டுக்கு அவித்துக் கொண்டிருந்தார்கள். இறந்தவருக்குப் படைப்பதாகச சொல்லி குவித்து வைத்த பொருட்களில் அனேகமாக எதுவும் அந்த மனிதன் உண்ணாதவைகளாகவே, ஏனைய பல செலவு வீடுகள் போல இங்கும் இருந்தன. இழப்பின் சோகம் தூர விலகி, ஒரு வித கோலாகல மன நிலையில் , வந்து கட்டியவர்களும் கட்டிய வழிகளால் ஒட்டியவர்களுமாக உரிமை போல ஆட்டம் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

விழா விஷேசங்களுக்கு அலங்கரித்தது போல அலங்கரித்துக் கொண்டு , தாராளமாக தங்கநகைகளை அள்ளிப்போட்டு பெற்றோரின் வசதிகளை வெளிக்காட்டியபடி முற்றத்திலும் முன் வாசலிலுமாகக் குழந்தைகள் குதூகலமாக ஓடி விளையாடிக் கொண்டிருந்தார்கள். இருந்தாற்போல்
இடையில் எதோ சலசலப்பு. ஆர்வமில்லாமல் திரும்பிப் பார்த்தாள். எங்கோ கட்டிக்கொண்டு, ஒட்டிக் கொண்டு வந்த உறவில் சில ஆண்கள் தண்ணியின் போதையில் மிதந்து கொண்டு , சத்தமாக நியாயம் கதைத்துக் கொண்டு, குழந்தைகளிடம் அக்கறையாக எதோ விசாரித்துக்கொண்டு, நடை தளம்ப கோணல் மாணலாக மிதந்து கொண்டு வாசலை நோக்கி ஓடினார்கள். அதில் எதோ ஒரு நாடகத் தன்மை இருப்பது போல அவளுக்குத் தோன்ற அருவருப்புடன் முகத்தை திருப்பி மதிலுக்கு வெளியே தெரிந்த கோவிலின் பின் வீதிக் கோபுரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

குழந்தைகள் ஒவ்வொருவரிடமாகப் போய் எதோ அவலம் போல் இரகசியத் தொனியில் பரகசியமாக எதையோ சொல்லிக் கொண்டு தம்மை நடுநாயகப் படுத்திக் கொண்ட விடயத்தை அவளிடமும் சொல்ல வந்தார்கள். ஆர்வமில்லாமல் நிமிர்ந்து பார்த்தாள். "அக்கா வெளியில ஒரு சங்கிலிக் கள்ளன் வந்து, முன் வீட்டு மதிலில சாஞ்சு கொண்டு நிண்டு கையை அசைச்சு என்னை வா வா எண்டு கூப்பிட்டவன்" கண்களாலும் , குரலாலும் விடயத்தை உருப்பெருப்பித்து உணர்ச்சியுடன் கூறியது குழந்தை. கூட நிண்டதுகள் வில்லுப்பாட்டுக்கு ஆமா போட்டன. சோர்வாக பார்த்து சலிப்புடன் "நீ எதுக்கு இங்கே எல்லாம் சங்கிலி காப்பு எல்லாம் போட்டுக் கொண்டு வந்தாய்?" என்றாள். "ஏன் நீங்க போட்டிருக்கிறீங்க தானே அப்பிடி தான் நானும் போட்டிருக்கிறன்." வெடுக் கென்று குழந்தை சொன்ன விதத்தில் வளர்ப்பு அப்பட்டமாகத் தெரிந்தது .

"நான் எப்பவும் தான் போட்டிருக்கிறான். நீங்கள் எதுக்கு புதிசா இண்டைக்கு ..... என்ன கலியாண வீடா நடக்குது இங்கே நீங்க சிங்காரிச்சுக் கொண்டு வந்து நிண்டு கும்மாளம் போட" என்று சினந்தவள் " சரி அவன் சங்கிலியை களட்டித் தரச் சொல்லி உன்னட்டைக் கேட்டானா?" என்றாள். "இல்லை அம்மா தான் சொன்னவ நிறைய ஆட்கள் வந்து போற இடம் யாராவது கூப்பிட்டால் கிட்டப் போகாதே . சங்கிலியை பிடுங்கிக் கொண்டு போயிடுவீனம் என்று". அப்பாவியாய் சொன்ன குழந்தையின் கழுத்தில் சங்கிலி திருடு போகாமல் தொங்கிக் கொண்டிருந்தது . ஓ... அம்மா.....

இப்போதெல்லாம் அவளுக்கு தாத்தா சொன்னது மாதிரி மனிதர்களை ஓரளவு விளங்கத் தொடக்கி இருந்ததால் வரட்சியாகப் புன்னகைத்துக் கொண்டு " உனக்குத் தலையில் எதுவுமே இல்லையா அம்மாவின்ர மூளையில் தான் நீ வளரப் போறியா?" என்றாள் சற்று ஏளனமாக. குழந்தைக்கு அதன் பொருள் புரியாமல் , கதை சொல்வதிலேயே ஆர்வமாக "அக்கா அந்தக் கள்ளன் வேற மாதிரி இருந்தான் கட்டையா தலையெல்லாம் வெள்ளையா நரைத்து வேறமாதிரி..... பைத்தியம் போல.... "

அவள் அதிர்ந்து போய் சட்டென்று எழுந்தாள். கடவுளே அவனா? .... பசிச்சிருக்கும் அவனுக்கு. இழப்பு பிறப்பு என்பன எதுவும் புரியாத இயந்திரம். பசி என்று வந்திருப்பான். சிவனே தாத்தா தலை சாய முன்னமே அவர் பழக்கி வளர்த்த தர்மங்களில் தவறி விட்டேனா என்று பதறிக் கொண்டு வாசலுக்கு ஓட,

அங்கே....... இடுப்பில் கிடந்த உடுப்பு விலகியது தெரியாத நிலையில் போதையில் மிதந்த வெறிக் கூட்டத்தின் கைக-ளில் அந்த அப்பாவி மனிதன் சின்னாபின்னமாகச் சிதைந்து

> " பெரிப்பா நான் வாறதுக்கு இடையில இந்த ஆளில் ஒரு துரும்பு விழுந்தாலும் என்னை நாளைக்கு விடிய ஏதாவது ஒரு கிணத்துக்கை கிடந்து தான் தூக்க வேண்டி இருக்கும்"

கொண்டிருந்தான். தெரு நாய்க்குப் பயந்து காலைத் தூக்கி சைக்கிள் ஹான்டிலில வைச்சு கொண்டு ஓடுற கோழைகள் கூட எதிர்வீட்டு மதிலுடன் சாய்த்து கால் தூக்கி அவனை அடித்துக் கொண்டிருந்தார்கள்.

நிறுத்தச் சொல்லி அவள் போட்ட ஓலம் மது மயக்கத்தின் காது வரை கூட எட்டியிருக்கவில்லை. அவர்களுக்கு நடுவில் புகுந்து அந்த மனிதனைப் பிரித்தெடுக்க அருவருப்பாக இருந்தது அவளுக்கு. அவசரமாய் வீட்டுக்குள் ஓடி வந்தாள். தன்னவர்களிடம் அவலமாய் அந்த மனிதன் சேதி சொன்னாள். தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டும் கண்கலங்கிய படியும், முழுங்கையால் நாடிக்கு முட்டுக் கொடுத்த படியுயம் இருந்த அவளது உறவுகளின் கண்களில் அநியாயத்தின் வேதனையைத் தவிர்க்க முடியாத அவலம் தெளிவாகவே தெரிந்தது.

இன்னும் பிரிக்கப்படாத பந்தலுக்கு ஓடி, பந்தலுக்குள் இருந்த ஆண் உறவுகளிடம் " வா மாமா. வந்து பாரு. செத்துப் போயிடும். வா பெரியப்பா " என்று ஒவ்வொருவராகக் கைபிடித்து இழுத்த போது தவிர்க்க முடியாது எழுந்தவர்களை கை கூப்பி அடக்கினாள் பாட்டி. வேண்டாம் எல்லாம் கட்டிக் குடுத்த வழியலல வந்த சொந்தம். குடி வெறியில வேற நிக்குதுகள். நாங்கள் ஏதும் வாயைத் திறக்க, வாய் வார்த்தை தடிச்சு குடும்பங்கள் குழம்பி கேவலமா போகுடும் " என்று கை கூப்பி கண்ணீருடன் கும்பிட்ட பாட்டி "மனிசன்ர தலை சாயுமுன்னம்கோவிலா இருந்த வீட்டை குடியும் கும்மாளமுமா இப்பிடி குட்டிச்சுவராக்குதுகளே" என்று புலம்பிக் கொண்டே சீலைத்தலைப்பில் மூக்கைச் சிந்திக் கொண்டாள்.

அரசாங்கத்தின் மாவட்ட ரீதியில் உயர்தர அதிகாரங்களை கைகளில் வைத்திருந்த பலரும் , ஓய்வு பெற்ற காவல்துறை உயர் அதிகாரிகளும் என்று சற்று வலுவான உறவு மனிதர்கள் அதில் இருந்தும், ஒரு அப்பாவி மனிதன் அடிபட்ட போது அவனுக்காக உருகாத, உதவாத ஆத்திரம் முகத்தில் தெறிக்க , குற்றச்சாட்டாய் நோக்கிய அவள் விழிகளைச் சந்திக்கத் தயங்கி, "சரி வா என்ன என்று கேட்கிறம் "என்று அணைத்துக் கொண்டு கூடவே வந்து, இரத்தம் வடிந்து , உடைகிழிந்து , புழுதியில் உருண்டு கிடந்த அந்த மனிதனின் நிலை கண்டு அதிர்ந்து , கண்களில் கோபமாகி, சட்டென அதை மறைத்து அமைதியாகி , "சரி சரி போதும் எதோ நடந்தது நடந்து போச்சு நிப்பாட்டுங்க " என்று சமாதானமாய் அவர்களை அழைக்க, இப்போது தங்கள் ஹீரோ வேஷ த்தை வீட்டு மனிதர்களுக்கு முன் போட்டுக் காட்டும் ஆசை அவர்களுக்கு வந்திருக்கலாம். திரும்ப காலுயர்த்தி அந்த மனிதனின் வயிற்றுக்கு ஓங்கியபோது தன்னைப் ஆதரவாகப் பற்றி இருந்த கையை உதறி அவசரமாகக் குறுக்கே போனாள்.

"விலத்து பிள்ளை இனி இந்தப் பக்கமே எட்டிப்பார்க்காத படி அவனுக்கு நல்ல பாடம் படிப்பிச்சு அனுப்ப வேணும்" என்று கொண்டே அவளைக் கைகளால் விலத்த, அவள் திமிற, இன்னும் சற்று அதிகமாய் கைகளில் பலத்தைக் கொடுத்து அவளை அப்புறப்படுத்த எத்தனித்தபோது, விரல் உயர்த்தி சத்தமொளமல் பல் நெருமி, " என்னைத் தாண்டி அவனில எவரின்ர கையாவது பட்டுது கொன்னுடுவன். என்னில எவனிண்ட கையாவது பட்டுது என்ர வீடே கொன்னுடும் உங்களை." வார்த்தைகளில் நெருப்புத் தெறிக்க அவள் சொன்னது குடிபோதையில் ஆக்கிரோஷம் ஏத்த, "எங்களைப்பார்த்தா எதிர்த்துக் கதைக்கிறாய் " என்ற அவர்களின் ஒற்றை வார்த்தையில் குடும்பம் அதிர்ந்தது. அத்தனை நேரம் அமைதியாய் இருந்த பதவித் தலைகளுக்கு இப்போது ஆவேசம் வந்தது. பதவிக்கும் அந்தஸ்த்துக்கும் உரிய அடங்கிய அதிகாரக் குரலில் "எங்கட பிள்ளையில வாயோ கையோ பட்டுது யாரும் தேவையில்லை இங்கே. அத்தனை பெரும் வெளியால போயிட வேணும் " என்ற அதிகாரத் தொனி, அவர்களுக்கு அவமானமும் ஆத்திரமும் ஏற்படுத்த அந்த அப்பாவி மனிதன் மீது இன்னும் காழ்ப்பாகி ஆவேசம் வந்து பாய்ந்தார்கள்.

நிமிர்ந்து பார்த்த பார்வையின் உக்கிரத்தில் அவர்களை ஒதுக்கி விட்டு, விழுந்து கிடந்த அந்த மனிதனை குனிந்து கைபிடித்துத் தூக்கினாள் அவள். சிவரோடு சாய்த்து இருத்தி " பெரிப்பா நான் வாறதுக்கு இடையில இந்த ஆளில் ஒரு துரும்பு விழுந்தாலும் என்னை நாளைக்கு விடிய ஏதாவது ஒரு கிணத்துக்கை கிடந்து தான் தூக்க வேண்டி இருக்கும். உங்களுக்கு நல்லாவே தெரியும் என்னை பற்றி" என்று எச்சரிக்கை போல சொல்லி விட்டு உள்ளே போனாள்.

தாத்தாவின் வேஷ்டி, தாத்தாவின் ஷர்ட் , தாத்தாவின் சட்டமிட்ட புகைப்படம் சித்தியின் முதலுதவிப் பெட்டியுடன் தங்களுக்கு சொந்தமான இன்னொரு வீட்டுத் திறப்பை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். "குட்டிம்மா என்ன இது" அதிர்ந்து கொண்டு பாட்டி ஓடி வந்தாள். பாட்டியின் பின் எல்லோரும் வந்தார்கள். "இது .... இது..... இது நம்ம வீடில்ல. என் தாத்தாவின் சடங்குகள் இப்பிடி நடக்க வேண்டாம். ஒரு பசிச்சவனுக்கு சோறு போட்டால் போதும் அவர் ஆத்மா சாந்தியடைஞ்சிடும். இந்த குடிகாரக் கூட்டத்தை வைச்சு நீங்க ஒப்புக்குக் கும்மி அடியுங்கோ இந்தப் பாவம் தாத்தாவைச் சேர வேண்டாம் " சொன்ன போது மனதை உடைத்துக் கொண்டு கண்கள் கொட்டின.

வேறு வீட்டுக் கிணத்தில் குளித்து , உடைமாற்றி, சின்னதாய் , தனியாய் ஒரு பால் சாதம் வைத்து , அதைத் தாத்தாவின் படத்தின் முன் படைத்து , அந்த மனிதனுக்கு வயிறார உண்ணக் கொடுத்து, கையோடு கூட்டிக் கொண்டு போய் சந்தியில் இருந்த டிஸ்பன்சரியில் காயங்களுக்குக் கட்டும்

*ராணுவம் அதிர்ந்து சந்தேகமாகி துப்பாக்கியை குறிவைத்து இயக்க 'டப்' என்ற ஒரு சிறு சத்தத்துடன் பின் மண்டையில் ப்ளக் என குமிழியாய் இரத்தம் பாய்ந்து முதுகில் கோடாய் வழிய வீதியின் ஓரத்தில் சத்தமில்லாமல் சாய்ந்தான்.*

, காச்சல் வந்தாலும் நோவுக்கும் சேர்த்து மாத்திரைகளும் வாங்கி வந்து, அந்த மனிதனை வழியனுப்பி வைத்த போது அந்த ஒரு நாளிலேயே அவள் பலருக்கு எதிரியாகி விட்டிருந்தாள்.

அதன் பின் அவள் அதிக காலம் அங்கிருக்கவில்லை. நாட்டின் போர் சூழல் குறித்த பயங்கள் காரணமாக சொந்த நாட்டிலேயே பலரையும் போல் அவளும் பாதுகாப்பான இடம் தேடிப் பெயர்த்து நடப்பட்டாள். வாழ்ந்த சூழலில் இருந்த நெருக்கமில்லாத பலர் பற்றிய நினைவுகளையும் மறந்து போனாள். அப்படித்தான் அந்த மனிதனும் பின்னாட்களில் நினைவுகளில் இல்லாமல் போனான்.

வாழ்க்கையில் சிலருடனான தொடர்புகள் பூர்வ ஜென்ம பந்தம் போல. எங்கே தொடங்கினோம் . எதற்காகச் சந்தித்தோம் என்பது புரியாத போதும் காலம் காரணமே இல்லாமல் அவர்களை அடிக்கடி சந்திக்க வைக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி எதோ ஒரு சம்பவத்தில் முடிவுரை எழுத முயன்று கொண்டே இருக்கும் . அப்படி ஒரு சந்தர்ப்பத்தில் தான் ,

போராளிகள் பதுங்கி ஊரை ராணுவம் கட்டிப்பாட்டுக்குள் வைத்திருந்த ஒரு காலப்பகுதியில் அது. ஒரு சிறு விடுமுறை காலத்தில் பிடிவாதமாக அவள் தன் ஊருக்கு வந்திருந்தாள். பலரையும் போல அவளுக்கும் அவர்கள் இல்லாத இடத்தில் இராணுவத்தின் நடமாட்டம் பிடித்திருக்கவில்லை. எப்போது அவர்கள் மீண்டும் இனி இங்கே உலவுவார்கள் என்ற ஏக்கத்துடன் அவர்கள் நடந்த பாதை எங்கும் நினைவுகளால் அளந்து கொண்டு ஒரு வார விடுமுறையும் ஓடிப் போக, திரும்பப் புறப்படுவதற்குத் தயாரான அதிகாலையில் அந்த முதல் வேட்டொலி கேட்டது.

பின், மெல்ல மெல்ல அவை பலத்து , உரத்து வெடிக்க , என்ன ஏதென்று புரியாத அந்த இருள் விலகாத விடிகாலையில் பயணத்தை தவிர்த்து விட்டு வீட்டுக்குள் முடங்கிக் கொண்டாள். இருள் பிரியும் நேரம் தொபு தொபு என்ற கனதியான காலடிகளுடன் அவர்கள் வரிசையாக வீட்டிற்குள் நுழைந்தார்கள். பலமுறையும் பட்ட அனுபவங்களும், கேள்விப்பட்ட கதைகளும் பெண்களை வேகமாக வெளியேறி முற்றத்தில் வந்து நிற்க வைத்தது. அவர்களின் மொழியில் அவர்கள் உரையாடிக் கொண்டிருந்ததை அவதானித்தபோது இரவோடு இரவாக போராளிகள் ஊருக்குள் நுழைந்து விட்ட சந்தேகம் அவர்களுக்கு இருந்தது புரிந்தது.

பதுங்கியவர்கள் திரும்பப் பாய வரும் போது எத்தனை கால இடைவெளியிலும் நிலைதளம்பி கட்சி மாறாத வீடுகளை மட்டுமே தஞ்சமடைவார்கள் என்ற தங்களின் கணிப்பீட்டில் ஒரு குறிப்பிட்ட பகுதியின் ஒவ்வொரு வீதியிலும் ஒவ்வொரு வீட்டைக் குறி வைத்துப் பதுங்கிக் கொண்டது ராணுவம்.

விடிந்து வேலைக்கு, கடைத்தெருவுக்கு என்று வீதியில் இறங்கிய மனிதர்கள் குறிப்பிட்ட வீடுகளைக் கடக்கும் நேரம் வாசல் கரையில் உட்பக்கமாக பதுங்கியிருந்து 'விஷ் விஷ் ' என்று வாயால் ஒலி எழுப்பி அவர்கள் திரும்பிப்பார்க்க துப்பாக்கியைக் காட்டி மிக லாவகமாக அமுக்கி வீட்டுச் சிறையில் போட்டு வீட்டை நிரப்பிக் கொண்டு போராளிகளுக்காகக் காத்திருக்க .......

அந்த மனிதன் வீதியில் அல்லது விதியின் பாதையில் நடந்து வந்தான். ..... இறுகிப்போன , பழுப்பு நிற பாறாங்கல்லில் வார்த்த குளமான சிலை கால் உயிர்த்து நடந்தது போல வீட்டைக் கடந்த போதும் விஷ் விஷ் என்றார்கள் அந்த மனிதன் திரும்பவில்லை கோபமானார்கள். காக்கிச் சட்டைகள் மீது காலத்தால் அளிக்க முடியாத வெறுப்பிருந்தும், தனக்காக உயிர்ச் சலுகைக்காக கூட அவர்களிடம் மண்டியிட முடியாத திமிர்ப்பிருந்தும் , அந்த மனிதன் அவர்களின் ஒலியை சட்டை செய்யாமல் அந்த இடத்தைக் கடக்கும் போது துப்பாக்கியில் கிளிக்கரை இழுத்த சத்தத்தில் அதிர்ந்து, அழுத்திப் பிடித்த தாயின் கரங்களை உதறி விட்டு ஓடிவந்து அவர்கள் முன் நின்று கைகூப்பிய போதே கண்ணீர் வந்தது. திக்கித் திக்கி அந்த மனிதனின் நிலை சொன்ன போது அவர்கள் கொஞ்சம் இரங்கியது போலிருந்தது.

அவன் வீட்டு எல்லையை தாண்டு முன் அவசரமாக வெளியில் இறங்கி உள்ளே கூட்டி வர அனுமதி தந்தார்கள். அவள் ஓடி , அவசரமா அவன் கைபற்றி " வேலிக்கரை எல்லாம் ஆர்மி மறைஞ்சு இருக்கு. இதுக்கு மேலே நடந்தால் சுட்டிருவாங்க. உள்ளே வா " என்று அவசரத்திலும் பதட்டத்திலும் இதமாகச் சொன்ன போது முதலில் அவளை அன்னியமாக நோக்கி பின் அடையாளம் கண்டு " புள்ள " என்று வெள்ளந்தியா 'ஈ ' என்று இளிச்சு வாசலில் பதுங்கிப் படுத்திருந்த ராணுவத்தை சட்டை செய்யாமல் ,அவளை நம்பி சாதாரணமாக உள் நுழைந்த மனிதன் , வீட்டு விறாந்தையில் ராணுவம் பிடித்து நிறைத்திருந்த மனிதர்களைக் கண்டதும் திடுக்குற்று தலையைக் குலுக்கிக் கொண்டான். கண நேரத்துக்குள் கண்களில் தெரிந்த அதிர்வில் அவசரமாக நேரத்தில் எதையோ ஞாபகப் படுத்துவது போன்ற பாவனை.

பட்டென கைகளை உதறிக்கொண்டு கண்மண் தெரியாத வேகத்தில் வீட்டில் இருந்து வெளியேறி வீதியில் இறங்கி வேகமாக ஓடத் தொடங்கினான். ராணுவம் அதிர்ந்து சந்தேகமாகி துப்பாக்கியை குறிவைத்து இயக்க ' டப்' என்ற ஒரு சிறு சத்தத்துடன் பின் மண்டையில் ப்ளக் என குமிழியாய் இரத்தம் பாய்ந்து முதுகில் கோடாய் வழிய வீதியின் ஓரத்தில் சத்தமில்லாமல் சாய்ந்தான். அவள் ஓலமிடத் திறந்த வாயை அம்மா தன் கைகளால் இறுக்கி பொத்தி மூடி அணைத்துக் கொண்டார்.

அன்று மாலை வரை ராணுவம் எதிர்பார்த்துக் காத்திருந்த போராளிகள் வராமல் போக, அந்தத் தகவல் ஊர்ஜிதப் படுத்தப்பட்ட பொய்த்தகவலாகி அவர்கள் வெளியேறிப் போனபின் அவள் வீட்டை விட்டு வெளியே வந்தாள். வீட்டுக்குச் சற்றுத் தள்ளிய வேலிக்கரைக் காவிளாய்ப பற்றைக்கு நடுவில் அநாதரவாய் சுருண்டு கிடந்த அந்த அப்பாவி மனிதனைப் பார்த்தாள். இரத்தம் உறைந்து வடிவது நின்று , சற்று நிறம் மங்கி விறைத்திருந்தான் . இரத்தம் வடிந்த ஓரங்களில் எறும்புகள் ஊர்ந்து கொண்டிருந்தன. சிறு இலையான்களும் . மணி இலையானும் சுற்றிப் பறக்கத் தொடங்கியிருந்தன. பொங்கிக் கொண்டு அழுகை வந்தது.

அவனை யாரும் தேடி வரமாட்டார்கள் என்பது புரிந்த போதே 'யாருமற்றவன்' என்ற வார்த்தைக்கு தாத்தா சொல்லாமல் விட்டுப் போன அர்த்தம் புரிந்தது. மனிதர்களுக்குள் வாழ்வதால் நாம் எமக்கான மனிதர்களுடன் வாழ்கிறோம் என்பது அர்த்தமில்லை. இதயம் தொட்டு நேசிக்காத வாழ்க்கையில் எல்லோரும் தனித் தனிப் பிரகிருதி என்ற தெளிவு வந்தது.

அருகில், அயலில், உறவில் அவன் பற்றி சொன்ன போது யாருக்கும் அது முக்கியமானதாகவும் இருக்கவில்லை அதைவிட ஆர்மி கொன்ற உடலை எடுத்துப் புதைப்பது ஆபத்து என்பதே அவர்களின் முக்கிய அறிவுரையாக இருந்தது.

அந்த மனித உடலையே பார்த்துக் கொண்டு அசையாது நின்றாள் அவள் . கொன்றது ராணுவம் தானா என்ற கேள்வி ஆழ் மனதுக்குள் இருந்து ஆவேசமாக நெருப்பெரிக்க, மனதில் தாத்தாவின் செலவு நாள் வந்து போனது.

இதே வீட்டின் , இதே விறாந்தையில் , இதேமாதிரி அன்றும் அதிகமாகக் கூட்டம் கூடி இருந்தது. அவன் வந்து குழந்தை ஒன்றைக் கூப்பிட்டான். வயிற்றைத் தடவி, பசியைச் சொல்லி ஒரு பிடி உணவு கேட்க , குழந்தை உள்ளே ஓடிற்று. கூட்டம் அவன் மேல் பாய்ந்தது..... அவன் பயந்து ஓடினான்.

கொன்றது ராணுவம் தானா?

----------- முற்றும்--------

(கதையும் பாத்திரங்களும் சம்பவங்களும் எழுதிய என் கற்பனையே என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன் )

உச்சி வேளையில் கிணற்றை எட்டி பார்க்க கூடாது என்று சொல்வது ஏன்?
உபயோக படுத்தாத கிணறுகளில் நச்சு காற்று உருவாகி இருக்கும். உச்சி வெயில் நேரத்தில் கிணற்றில் சூரிய ஒளி விழும். சூரிய ஒளியால் வெப்பமடைந்த நச்சு காற்று விரிவடைந்து மேலே வரும். அந்த வேளையில் நாம் கிணற்றை எட்டி பார்த்தல் அவ்வாயுவால் தாக்கப்பட்டு கிணற்றுக்குள் விழ வாய்ப்பு அதிகம்.

பாலுவின்....

# லண்டனில் பிள்ளையார்

இரண்டாம் அத்தியாயம்

ரயில்நிலைய வாசலை பிள்ளையார் நெருங்கியபோது அவர் தோளைத் தட்டி “வணக்கம் தோழர்” என ஒரு குரல் அழைத்தது.

இதனைக்கேட்டு லண்டனில் தன்னை தமிழில் அதுவும் தோழர் என்று அழைப்பது யாராக இருக்கும் என ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தார் பிள்ளையார்.

“ ஓ தோழர் லெனினா? என்னால் நம்பமுடியவில்லை” என்றார் பிள்ளையார்.

தோழர் லெனின் ஏதோ வெளிநாடு சென்றுவிட்டார் என்று ஊரில் பிள்ளையார் கேள்விப்பட்டிருந்தார். ஆனால் அவரை லண்டனில் அதுவும் ரயில் நிலையத்தில் சந்திப்பேன் என அவர் எதிர்பார்க்கவேயில்லை.

ஊரில் தோழர் லெனின் இயக்கத்தில் சேர்ந்த காலத்தில் சிவப்புச் சட்டை போட்டு சிவப்பு மட்டை கொண்ட கம்யுனிஸ்ட் புத்தகங்களை கொண்டு திரிவார். பேசும் போது எப்போதும் கம்யுனிஸ்ட் தலைவர்களின் மேற்கோள்களை சுட்டிக்காட்டி பேசுவார். மேற்கோள்களை சுட்டிக்காட்டும்போது எத்தனையாவது பக்கம் என்றுமட்டுமல்ல எத்தனையாவது பந்தியில் எத்தனையாவது வரியில் உள்ளது என்றும் கூறுவார்.

அவர் இவ்வாறு கூறுவது உண்மையாக இருப்பதில்லை.

ஆனால் அவர் இவ்வாறு கூறியதும் எல்லோரும் அசந்துபோய் அவரை மார்க்சியத்தைக் கரைத்துக்குடித்த ஒரு புலி என்றே எண்ணினார்கள்.

அவருடைய சொந்தப்பெயர் வேறாக இருந்தபோதும் அவர் சிவப்புச்சட்டை போட்டு லெனின் போல் குறுந்தாடி விட்டு திரிந்ததால் அவரை தோழர் லெனின் என்றே எல்லோரும் அழைத்தனர். அவரும் தன்னை எல்லோரும் தோழர் லெனின் என்று அழைப்பதையே விரும்பினார்.

பலர் இயக்கங்களை விட்டு வெளிநாடுகளுக்கு ஓடியபே-ாது அவர்களை துரோகிகள் என்று ஏசிய இவர் இறுதியில் தானே இரகசியமாக வெளிநாட்டுக்கு ஓடுவார் என யாரும் எதிர்பார்க்கவேயில்லை.

அப்படிப்பட்ட அவரை லண்டனில் சந்திப்பேன் என பிள்ளையார் எதிர்பார்க்கவேயில்லை.

அதே குறுந்தாடியுடன் ஆனால் கையில் பியர் ரின்னுடன் அவரைப் பார்த்தது ஆச்சரியமாக இருந்தது. பிள்ளையார் பியர்ரின்னைப் பார்ப்பதைக் கண்டதும் “மார்க்ஸ் நல்லாய்க் குடிப்பார். மாசேதுங் நாலு பெம்பிளைகளை கலியாணம் செய்திருக்கிறார். எனவே உண்மையான கம்யுனிஸ்ட் நல்லாய் குடிக்க வேண்டும் நல்லாய் பெண்களுடன் அனுபவிக்க வேண்டும்” என்று தன் கையில் இருந்த பியர் ரின்னுக்கு பிள்ளையார் கேட்காமலே விளக்கம் கொடுத்தார் லெனின்.

பிள்ளையாருக்கும் ஒரு பியர்ரின்னை நீட்டி குடிக்கும்படி வற்புறுத்தினார்.

பிள்ளையார் மறுத்ததும் “மாசே துங் மக்களுடன் சேர்ந்து உண்ணுங்கள் உறங்குங்கள் உழையுங்கள் என்றார். எனவே லண்டனில் வெள்ளைக்காரன் போல் பப்புக்குச் சென்று குடிக்க வேண்டும் டிஸ்கோ ஆட வேண்டும் கூத்தடிக்க வேண்டும் .அதுதான் உண்மையான மார்க்சியம்” என்று விளக்கம் கொடுத்தார்.

லண்டன் வந்து தனது மார்க்சிய அறிவை வளர்த்துக்கொள்வதிலும் பார்க்க தான் தண்ணியடிப்பதை மார்க்சியத்தின் மூலம் இவ்வாறு நியாயப்படுத்த நன்கு கற்றுக்கொண்டுள்ளார் என பிள்ளையார் எண்ணினார். மேலும் இவ்வாறானவர்களின் கைகளில் இருப்பதால்தான் மார்க்சியம் இன்னமும் வெல்லவில்லைபோலும்

என்றும் எண்ணினார்.

லெனின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாவிடினும் அவருடன் கதைப்பது பிள்ளையாருக்கு கொஞ்சம் ஆறுதலாக இருந்தது. "சாப்பிட்டீர்களா?" என்று கேட்டுவிட்டு பிள்ளையாரின் பதிலைக்கேட்காமலே அவரை இழுத்துக்கொண்டு அருகில் இருந்த மக்னொடால்க்குச் சென்றார் லெனின்.

அங்கே அவர் வாங்கிக்கொடுத்த சிக்கன்பேகரைச் சாப்பிட்டுக்கொண்டு அவரின் கதைகளை கேட்டு ரசித்துக்கொண்டிருந்தார் பிள்ளையார்..

அப்போது "வெகுவிரைவில் புரட்சி வரப்போகிறது" என்றார் தோழர் லெனின்.

கிறிஸ்தவ மதத்தினர் இயேசு சீக்கிரம் வரப்போகிறார் என்று அந்தக்காலம் முதல் சொல்லிக்கொண்டிருப்பது போல் இந்த மார்க்சியவாதிகளும் புரட்சி வரப்போகிறது என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் ஆனால் இன்னும் வந்தபாடில்லை. எனவே இதனை எண்ணி மனதிற்குள் சிரித்தார் பிள்ளையார்.

அப்போது லெனின் திடீரென பிள்ளையாரைப் பார்த்து "நீர் இங்கு அகதியாக வர யார் காரணம் தெரியுமா?" எனக் கேட்டார்.

கம் வந்தது பிள்ளையாருக்கு. பிள்ளையாரும் நிச்சயம் வருவதாக வாக்குக்கொடுத்ததால் கொடுத்த வாக்கைக் காக்கும் பொருட்டு தோழர் லெனிடம் விடைபெற்றுக்கொண்டு அண்டர்கிரவுண்டு ரயிலில் ஏறி உட்கார்ந்தார்.

பிள்ளையார் உட்கார்ந்ததும் அவர் அருகில் உட்கார்ந்து இருந்த வயோதிப ஆங்கில வெள்ளையினப் பெண்மனி உடனே எழுந்து நின்று கொண்டார். அவர் தனக்கு அருகில் இருக்கப் பிடிக்காமல் எழுந்து நிற்கிறார் என்பது பிள்ளையாருக்குப் புரிந்தது.

ஆனால் அது ஏன் என்றுதான் அவருக்குப் புரியவில்லை.

அப்போது முன்னால் இருந்த கறுப்பு இன வாலிபர் அவ் வயோதிபப் பெண்மனியைப் பார்த்து " நீங்கள் திருந்தவே மாட்டீர்களா" என்று கேட்டுவிட்டு பிள்ளையாரைப்பார்த்து "இந்த வெள்ளை பெட்டை நாய்களுக்கு இரவில் செக்ஸ்க்கு கறுப்பன் தேவை. ஆனால் பகலில் மட்டும் கறுப்பன்களுக்குப் பக்கத்தில் உட்காரமாட்டார்களாம்" என்று கூறினான்.

பிள்ளையார் தான் ஒரு கறுப்பன் என்பதால்தான் நிற வெறி கொண்ட அப் பெண்மணி தன் அருகில் உட்கார்ந்திருக்க விருப்பமின்றி எழுந்து கொண்டாள் என்பதை அப்போதுதான் உணர்ந்து கொண்டார்.

> உலகிற்கு நாகரீகத்தைக் கற்றுக் கொடுப்பதாக கூறிக்கொள்ளும் பிரிட்டனில் இப்போதும் நிறவெறி இருப்பதைக் காணும்போது பிள்ளையாருக்கு ஆச்சரியமாக இருந்தது..

அதற்கு பதில் சொல்ல பிள்ளையார் முனைய உடனே அவரே "அமெரிக்காவின் சி.ஐ.ஏ வின் சதிதான் காரணம்" என்றார். "அதுமட்டுமல்ல மார்க்ஸ் சொல்லியிருக்கிறார்.இயக்கங்கள் தும்முவதற்கும் கொட்டாவி விடுவதற்கும் கூட ஏகாதிபத்தியம்தான் காரணம் என்று. எனவே சி.ஐ.ஏ தான் அனைத்திற்கும் காரணம். சந்தேகமில்லை" என்றார்.

இதைக் கேட்டதும் பிள்ளையாருக்கு சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை.

ஏனெனில் லெனின் இதனை சீரியஸ்யாகவே சொல்லிக்கொண்டிருந்தார். எடுத்ததற்கெல்லாம் சி.ஐ.ஏ தான் காரணம் என்று கூறுவதை கம்யுனிஸ்டுகள் எப்போது நிறுத்திக்கொள்கிறார்களோ அப்போதுதான் அவர்களின் புரட்சி வெல்லும் போலும் என்று பிள்ளையார் மனதிற்குள் எண்ணிக்கொண்டார்.

தோழர் லெனினுடன் கதைத்துக்கொண்டிருந்ததில் பிள்ளையாருக்கு நேரம் போனதே தெரியவில்லை. அப்போதுதான் காலையில் கரவெட்டி அன்பர் ஒருவர் தனது கோவிலுக்கு கட்டாயம் வரவேண்டும் என்று அழைத்தது ஞாப-

உலகிற்கு நாகரீகத்தைக் கற்றுக் கொடுப்பதாக கூறிக்கொள்ளும் பிரிட்டனில் இப்போதும் நிறவெறி இருப்பதைக் காணும்போது பிள்ளையாருக்கு ஆச்சரியமாக இருந்தது.. தன் முன்னால் இருந்த கறுப்பு இளைஞன் கொச்சையாக அவ்வாறு கூறியதைக்கேட்டபோது கூச்சமாக இருந்தபோதும் அவனது பீறிட்டு எழும் கிளர்சிக் குணாம்சத்தின் பின்னனியில் நிறவெறியின் கொடுமையான அனுபவம் எந்தளவு இருந்திருக்கும் என்பதை பிள்ளையாரால் நன்கு புரிந்து கொள்ளமுடிந்தது..

நிறவேற்றுமை இனவேற்றுமை மதவேற்றுமை சாதிவேற்றுமை எல்லாம் நீங்கி எல்லோரும் சகோதரர்களாக ஒற்றுமையாக இந்த மனிதர்கள் எப்போது வாழப்போகிறார்கள் என்று பிள்ளையார் எண்ணிக்கொண்டிருந்த போது இன்னொரு ஆச்சரியம் அவருக்கு ஏற்பட்டது.

கையில் குழந்தையுடன் ஒரு போஸ்னிய நாட்டுப்பெண்மணி பிச்சை கேட்டுக்கொண்டுவந்தாள்.

இவ்வாறு பிச்சை எடுக்கும் காட்சிகள் இலங்கை இந்தியா நாடுகளில் சர்வ சாதாரணமானது. ஆனால் உண்மையில் லண்டனில் இக் காட்சியைக்காணுவேன் என பிள்ளையார் எதிர்பார்க்கவேயில்லை. ஏதோ வெளிநாட்டுக்காரர்கள்தான்

இப்படி பிச்சை எடுக்கின்றார்கள் என்றில்லை பிரிட்டிஸ் பிரஜைகள் கூட கையில் நாயைப்பிடித்துக்கொண்டு பிச்சை எடுப்பதை காணக்கூடியதாக உள்ளது.

இவைகள்தான் லண்டனின் நிஜ முகங்களோ என எண்ணியவண்ணம் ரயிலை விட்டு இறங்கி அன்பரின் கோயிலை நோக்கிச்சென்று கொண்டிருந்தார் பிள்ளையார்.

---

# இண்டிர்யாமி



இண்டிர்யாமி என்பது இன்கா நாகரிகத்தில் சூரியக்கடவுளுக்காக கொண்டாடப்பட்ட ஒரு விழாவாகும். இவ்விழாவின் போது சூரியக்கடவுளே தங்களது இருப்பிடம் வந்து வசிப்பதாக நினைப்பது இன்காக்களின் நம்பிக்கை. இந்நாளில் இன்காக்களின் தலைநகரான கஃசுகோ வில் செவ்விந்தியர் அனைவரும் கூடி சூரியனை வழிபடுவர்


காலங்கள் மாறினாலும்
காட்சிகள் மாறவில்லை
2016
தமிழ் இலக்கிய இளைஞர் பேரவை